இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 417

சனி, 14 நவம்பர், 2026 |

பக்கங்கள் 18

www.ilakku.org

2027ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம்: இலக்கங்கள் நிறைந்த கவர்ச்சியான ஆவணம்

வரவு-செலவுத் திட்டம் 2027

விதுரன்

13-க்கு... இன்று 39 வயது!

மட்டு.நகரான்

NVIDIA விவகாரம்: சீன உளவுத்துறைத் தொடர்பு, சிங்கப்பூர் மற்றும் அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு அச்சுறுத்தல்

A.M.L லம்பேட்

சிவாஜிலிங்கத்தின் வீட்டில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு விசாரணை



யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் எம்.கே. சிவாஜிலிங்கம் சிகிச்சை பெற்று வரும் நிலையில், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் அவரது வீட்டிற்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தமையைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகத் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர், சிரேஷ்ட சட்டத்தரணி சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறை நகர சபையின் நகர முதல்வரான எம்.கே. சிவாஜிலிங்கத்திற்கு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவரது உடல்நிலை மோசமான நிலையில் உள்ளதுடன், தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், வல்வெட்டித்துறையில் உள்ள சிவாஜிலிங்கத்தின் வீட்டிற்குச் சென்ற பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர், அவரது மனைவியிடம் நீண்ட நேரம் விசாரணைகளை முன்னெடுத்து வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர். பின்னர், எதிர்வரும் டிசம்பர் 18ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றில் சிவாஜிலிங்கம் முன்னிலையாக வேண்டும் என்றும் அழைப்பாணை வழங்கிச் சென்றுள்ளனர்.

தொடர்ச்சி: பக்கம் 16

செம்மணி மனிதப் புதைகுழி: சர்வதேச விசாரணை கோரி போராட்டம்

செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச விசாரணை கோரி, எதிர்வரும் 17ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள போராட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னாரில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் தொடர்பாகப் பேராசிரியர் சமர்ப்பித்த அறிக்கையில், நோயால் இறந்த நபர்களைக் கொண்டுவந்து புதைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இவ்வாறு நோயால் இறந்தவர்களைப் புதைத் திருந்தால், எவ்வாறு ஆடைகள் இன்றியும், கயிற்றினால் கட்டியும், கடுமையாகத்

தொடர்ச்சி: பக்கம் 15

வலி. வடக்கு மக்களின் நிலமீட்புப் போராட்டம் 30ஆவது வாரத்தை எட்டியது

வலி. வடக்குப் பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி, காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் "கொமோண்டோ" பங்களா முன்பாக இன்றைய தினம் வெள்ளிக்கிழமை 30ஆவது வாரமாகப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வலி. வடக்கில் 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள், கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாத காலப்பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர். பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டது.

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்புத் தரப்பினர் வெளியேறாமல் உள்ளதாகக் காணி உரிமையாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இந்நிலையில், தமது காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாகக் காணி உரிமையாளர்கள் போராடி வரும் சூழலில், காணிகளை விடுவிக்குமாறு

தொடர்ச்சி: பக்கம் 15

ஈரான் மீதான போர் வியூகம் குறித்து ட்ரம்பின் நிர்வாகத்தில் கருத்து வேறுபாடுகள்



ஈரான் மீதான போரை எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவருவது என்பது குறித்து அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் பிளவுபட்டுள்ளதாகத் தெரிகிறது. வாஷிங்டன் மேலும் இராணுவ நடவடிக்கை எடுப்பதா அல்லது இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்வதா என பரிசீலித்து வரும் நிலையில், மூத்த அதிகாரிகள் வெவ்வேறு அணுகுமுறைகளை ஆதரிக்கின்றனர்.

அமெரிக்காவின் பொருளாதார அழுத்த நடவடிக்கை மிகவும் பயனுள்ளதாக நிரூபிக்கப்பட்டு வருவதால், மேலும் பெரிய இராணுவ நடவடிக்கைகள் தேவையில்லை என்று வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ கூறினார். அதே நேரத்தில், துணை அதிபர் ஜே.டி. வேன்ஸ், தெஹ்ரானுடன் பேச்சுவார்த்தை மூலம் ஒரு உடன்பாட்டை ஆதரிப்பதாகக் கூறப்படுகிறது. இதற்கிடையில், மீண்டும் தாக்குதல்கள் நடத்தப்படுவது சாத்தியமில்லை என்று ட்ரம்ப் சமிக்ஞை அளித்துள்ளார், ஆனால் ஈரானிய துறைமுகங்களுக்கான கடற்படை முற்றுகையைத் தொடர்கிறார். ஆக்சியோஸ் (Axios) தகவலின்படி, அவரது நிர்வாகம் முழு அளவிலான போருக்குத் திரும்புவதைத் தவிர்த்து, பொருளாதார அழுத்தத்தைத் தீவிரப்படுத்த முடிவு செய்துள்ளது.

இடைக்காலத் தேர்தல்களில் குடியரசுக் கட்சியினர் அடைந்த தோல்வியைத் தொடர்ந்து இந்த விவாதம் எழுந்துள்ளது. இது பதற்றத்தை அதிகரிப்பதற்கான அரசியல் விலையை உயர்த்தியுள்ளது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். போரை நிறுத்துவதற்கான நாடாளுமன்றச் சட்டத்தை 71 சதவீத அமெரிக்கர்கள்

தொடர்ச்சி: பக்கம் 16

ஜெர்மனி அணு ஆயுதப் போரைத் தூண்டக்கூடும்



ரஸ்யாவுடன் ஏற்படக்கூடிய மோதல் ஒரு அணு ஆயுதப் போரைத் தூண்டிவிடும் என்ற கவலைகளின் காரணமாக, அந்நாட்டின் நீண்ட தூர ஏவுகணைகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை வரையறுக்குமாறு பிரான்ஸ், ஜெர்மனியை வலியுறுத்தி வருவதாக, அந்த இரு ஐரோப்பிய நாடுகளின் அதிகாரிகளை மேற்கோள் காட்டி ஃபைனான்சியல் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்கு ஐரோப்பாவிற்கு எதிராக எந்தவொரு ஆக்கிரமிப்பு நோக்கங்களையும் கொண்டிருக்கவில்லை என்று மாஸ்கோ மீண்டும் மீண்டும் கூறியுள்ளதுடன், நேட்டோ முதலில் ரஸ்யாவைத் தாக்கினாலோ அல்லது அதன் உறுப்பு நாடுகள் தங்கள் படைகளை உக்ரைனுக்கு அனுப்பினாலோ மட்டுமே நேட்டோவுடன் ஒரு மோதல் சாத்தியமாகும் என்றும் அது மேலும் கூறியுள்ளது.


ஜெர்மனியின் ஆழ் தாக்குதல் திறன்களைப் பயன்படுத்துவது குறித்த கோட் பாட்டை பிரான்சின் அணு ஆயுத உத்தியுடன் சீரமைப்பதற்காக, பாரிஸ் பெர்லினுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக ஃபைனான்சியல் டைம்ஸ் புதன்கிழமை (11) ஒரு கட்டுரையில் தெரிவித்துள்ளது.

ஜெர்மனி மற்றும் பல ஐரோப்பிய ஒன்றிய நாடுகளையும் பாதுகாப்பதற்காக தனது நாட்டின் அணு ஆயுதப் பாதுகாப்பை விரிவுபடுத்தத் தயாராக இருப்பதாக பிரெஞ்சு அதிபர் இம்மானுவேல் மக்ரோன் மார்ச் மாதம் கூறியதைத் தொடர்ந்து, அந்நாடுகளுடனான இந்த விவாதங்கள் தொடங்கியதாக அது கூறியது.

இங்கிலாந்து மற்றும் ரஸ்யாவைத் தவிர, ஐரோப்பாவில் தனது சொந்த அணு ஆயுதக் களஞ்சியத்தை உருவாக்கிய ஒரே நாடு பிரான்ஸ் மட்டுமே. இருப்பினும், குறிப்பாக ஜெர்மனி மற்றும் துருக்கி போன்ற பல நாடுகள் அமெரிக்க அணு ஆயுதங்களையும், பெலாரஸ் ரஸ்ய அணு ஆயுதங்களையும் கொண்டுள்ளன.

ரஸ்யாவைத் தாக்குவதற்கு வழக்கமான ஆயுதங்களை மட்டுமே பயன்படுத்திய பிறகு, ஐரோப்பியர்கள் "அணுசக்தி பதிலடியைப் பெற" வாய்ப்புள்ளது என்று பெயர் குறிப்பிடப்படாத பிரெஞ்சு அதிகாரி ஒருவர் அந்த ஊடகத்திடம் கூறினார். "ரஸ்யர்கள் சரியான சமிக்ஞையைப் பெறவில்லை என்றால், நாம் உணராமல் அணு ஆயுத வரம்பை அடையக்கூடும்," என்று அவர் எச்சரித்தார்.

ரஸ்யாவின் 'நிழல் கப்பற்படை' கப்பலின் இந்திய கேப்டனுக்கு ஐக்கிய இராச்சியத்தில் 10 ஆண்டுகள் சிறை



ரஸ்யா மீதான மேற்கத்தியத் தடைகளை மீறியதாகக் கூறப்படும் குற்றச் சாட்டின் பேரில் இங்கிலாந்தில் தடுத்து வைக்கப்பட்ட இந்திய எண்ணெய் கப்பலின் கேப்டன், பத்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையை எதிர்கொள்கிறார். இந்த வழக்கு சர்வதேச மாலுமி சங்கங்களிடமிருந்து கடுமையான விமர்சனங்களை ஈர்த்துள்ளது.

கடந்த ஜூன் மாதம், சர்வதேச கடல் பகுதியில் பிரிட்டிஷ் அதிகாரிகள் எம்.வி. ஸ்மிர்டோஸ் கப்பலை வழிமறித்து அஜய் பந்தைக் கைது செய்தபோது, அவர் அக்கப்பலுக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்தார்.

ஈரான் மற்றும் ரஸ்ய மீது மேற்கத்திய நாடுகள் விதித்த ஒரு தலைப்பட்சமான

தொடர்ச்சி: பக்கம் 16

200 பேரின் மரணத்தைத் தடுக்கத் தவறிய ஐக்கிய நாடுகள் அமைதிப்படை



இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஆயுத மேந்திய நபர்கள் ஒரு கிராமத்தின் மீது தாக்குதல் நடத்தி 200-க்கும் மேற் பட்டோரைக் கொல்வதற்கு முன்பு விடுக் கப்பட்ட எச்சரிக்கைகளின் பேரில், தெற்கு சூடானில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைதிப்படையினரும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டனர் என்று அம்னெஸ்டி இன்டர்நேஷனல் தனது புதிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வியாழக்கிழமை (12) வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில், சூடான் எல்லைக்கு அருகிலுள்ள தொலைதூரப் பகுதியான அபியெம்னோமில் உள்ள ஒரு கிராமத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட வாய்ப்புள்ளது என்பதை UNMISS எனப்படும் ஐ.நா. பணிக்குழு அறிந்திருந்தது என்றும், ஆனால் மார்ச் 1 அன்று நடந்த தாக்குதலுக்குப் பிறகே அங்குள்ள தனது சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட அமைதிப்படையினரை வலுப்படுத்தியது என்றும் அந்த மனித உரிமை அமைப்பு கூறியுள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் தேர்தல்கள், பலவீனமான அமைதியைச்

தொடர்ச்சி: பக்கம் 16

வாராந்த மின்னிதழ் | இதழ் 417 | ஆசிரியர் தலையங்கம்
சனி, 14 நவம்பர், 2026 | பக்கம் 03

ஜனாதிபதியின் வரவு-செலவுத் திட்ட உரையில் தமிழ்த் தேசியப் பிரச்சினை குறித்து கருத்துரைக்கவில்லை: சாணக்கியன் சாடல்

ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத் தின் வெளிப்பாடாகும் என்றும், ஜனாதிபதி தனது உரையில் தமிழ்த் தேசியப் பிரச்சினைகள் குறித்து ஒரு வார்த்தைகூடக் குறிப் பிடவில்லை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இது துரதிர்ஷ்டவசமான நிலை என்றும் அவர் விமர் சித்துள்ளார். நேற்று (13) பாராளுமன்றத்தில் கருத்துரைத்த அவர், கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட உரைகளில் தமிழ்த் தேசியக் கேள்விகள் தொடர்பான அரசாங்கத் தின் நிலைப்பாடுகளும், அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிவிப்புகளும் இடம்பெற்றிருந்தன.

முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் தமிழ் மக்களின் பிரச்சி னைகள் குறித்துக் குறிப்பிட்டிருந்தனர்.

ஆனால், தற்போதைய ஜனாதிபதி தனது உரையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக எதனையும் குறிப்பிடவில்லை என்று தெரிவித்தார்.

“பொறுப்புக்கூறல் மற்றும் உண்மையைக் கண்டறிவதற் கான நடவடிக்கைகள் குறித்தும் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதேபோன்று, காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியன தொடர்பாகவும் இம்முறை கவனம் செலுத்தப்படவில்லை” என்று சாணக்கியன் விமர்சித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட தரப்பினர் உள்ளகப் பொறிமுறையைப் புறக்கணித்துள்ள நிலையில், அரசாங்கம் அதே உள்ளகப் பொறி முறையைச் சர்வதேசத்துக்கு முன்மொழிந்துள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள் குறித்தும் ஜனாதிபதி ஒரு வார்த்தை கூடக் குறிப்பிடவில்லை.

ஆறு மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டுவருவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.காணி விடுவிப்பு தொடர்பாகவும் ஜனாதி பதி எதனையும் குறிப்பிடவில்லை.

இது மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகச் சாணக்கியன் தெரிவித்தார். தமிழ்த் தேசியப் பிரச்சினைகளைக் கவனத்திற் கொள்ளாமல் ஜனாதிபதி புறக்கணித்துள்ளார். இதற்குத் தமிழ் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

“புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர் பாகவும் ஜனாதிபதி ஒரு வார்த்தைகூடக் குறிப்பிடவில்லை. இது கார்த்திகை மாதமாகும். எமது உறவுகளை நாம் நினைவுகூர வேண்டிய மாதம். மாவீரர் துயிலும் இல்லங்களைத் துப்புரவு செய்து, எமது மக்கள் தமது உறவுகளை நினைவுகூருவார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கில் பாலங்களைக் கட்டுவதற்கான முன்மொழிவுகளை முன்வைத்துவிட்டு, தமிழ் மக்களைப் புறக்கணிப்பதையும், எமது மக்களின் அபிலாஷைகளை அலட்சியப்படுத்துவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. எமது மக்களின் காணிப் பிரச்சினை மிகவும் முக்கியமான ஒன்றாகும்”

தொடர்ச்சி: பக்கம் 15

நெதர்லாந்தில் போலி வேலைவாய்ப்பு மோசடிகள்: இலங்கையர்களுக்கு தூதரகம் எச்சரிக்கை

நெதர்லாந்தில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி முன்னெடுக்கப்படும் போலியான வேலைவாய்ப்பு மோசடிகள் குறித்து, நெதர்லாந்து இராச்சியத்தின் தூதரகம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. இவ்வாறான மோசடி களில் ஏற்கனவே பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள தூதரகம், சிலர் போலியான வேலைவாய்ப்புகளை வழங்குவதாகக் கூறி வேலை தேடுபவர்களை ஏமாற்றி வருவதுடன், நெதர்லாந்து குடிவரவு சேவையினால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் போலியான கடிதங்களையும் புழக்கத்தில் விட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

பெரும்பாலான வேலைவாய்ப்புகளுக்கு நெதர்லாந்து பொதுவாகப் பணி விசாக்களை வழங்குவதில்லை எனத் தெரி வித்துள்ள தூதரகம், உயர் திறன்சார் தொழில்நுட்பப் பணிகள் போன்ற விதிவிலக்கான துறைகளில் மாத்திரமே உண்மையான வேலைவாய்ப்புகள் காணப்படக்கூடும் என்றும் தெளிவுபடுத்தியுள் ளது.

மேலும், நெதர்லாந்தில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் தூதரகம் ஈடுபடு வதில்லை என்றும் வலியுறுத்தியுள்ளது.

எந்தவொரு நிதி உறுதிப்பாட்டையும் வழங்குவதற்கு முன்னர், வேலைவாய்ப்பை வழங்குவதாகக் கூறும் நிறுவனங்கள் அல்லது முதலாளிகளுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு அதன் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான மோசடிகளில் பாதிக்கப்பட்டவர்கள், உடனடி யாக இலங்கையின் சட்ட அமலாக்க அதிகாரிகளிடம் சட்ட உதவியை நாடுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஆசிரியர் தலையங்கம் | 14 நவம்பர், 2026
சிறிலங்காவின் பொருளாதார உறுதித்தன்மையென ஈழத்தமிழர் இறைமை நீக்க தேசிய நீக்க வரவுசெலவுத்திட்டம்

கடந்த வாரத்தில் பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் நாளாந்த வாழ்வு மீயுயர் புத்திசாலித்தனக் கருவிகளின் தொழில்நுட்பச் செயலிழப்புகளாலும், கடுமையான பாதிப்புகளை அனுபவிக்க வேண்டி நேர்ந்தது.

பிரான்ஸ் மற்றும் 7 ஐரோப்பிய நாடுகளில் உணவுச்சங்கிலிக் கடைகள் சிலவற்றின் குளிர்சாதனப் பெட்டிகளின் வெப்பநிலை இனந்தெரியாதவர்களால் அதிபுத்திசாலித்தனக் கருவிகள் வழி தனது நாட்டில் உயர்த்தப்பட்டதற்கு ஈரானின் படைப்பிரிவொன்றே பொறுப்பு என்று வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டியது. பிரான்சின் இரத்த வங்கிகளின் வெப்பநிலையை மாற்ற நடந்த முயற்சிகள் உடனேயே கண்டுபிடிக்கப்பட்டதால் சேமித்து வைத்திருந்த இரத்தம் எதுவும் பழுதடையாமல் பாதுகாக்கப்பட்டது.

ஐரோப்பிய நாடுகளில் விமானங்களுக்கு பறந்து கொண்டிருக்கையில் விடுக்கப்பட்ட வெடிகுண்டு அச்சுறுத்தல்களால் பல விமானங்கள் அவசரத் தரையிறக்கங்களைச் செய்ததால் விமானப் போக்குவரத்து தாமதங்களும் ரத்துகளும் அதிகமாக இருந்தன. இத்தாலியிலும் ஸ்கொட்லாந்திலும் வட அயர்லாந்திலும் பள்ளிக்கூடங்களுக்கு வெடிகுண்டு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதால் மாணவர்களை வெளியேற்றி பாதுகாப்புச் சோதனைகள் நடாத்தப்பட்டன.

உலகளாவிய நிலையில் 13ஆம் திகதி மைக்ரோசொப்ட் 18 மணிநேரம் செயலிழந்ததால் பாராளுமன்ற நிகழ்வுகள் முதல், பொலிஸாரின் தொடர்புகள், மருத்துவர்களுக்கான தொடர்புகள் போன்ற அவசியத் தொடர்புகளை மேற்கொள்ள இயலாது இங்கிலாந்தே அல்லோலகல்லோலப்பட்டது. அன்று மாலை அமெரிக்கச் செய்திகளின்படி அங்கும் தொடர்புச் சாதனங்களின் செயலிழப்புகளால் 7,000-க்கும் மேற்பட்ட விமானங்கள் தரையிறக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது.

இவ்வாறாக உலகத் தொடர்பாடல்களில், உணவு வழங்கல்களில், மாணவர் வாழ்வுகளில் மனிதத்தன்மையற்ற செயற்பாடுகள் இன்றைய உலகின் அபாயகரமான நிலைக்கான முன்னெச்சரிக்கையாக இவை அமைகின்றன. இந்நேரத்தில், ஈழத்தமிழர்கள் போன்ற உலகின் தேச இனங்கள் தங்களுக்கிடையில் உள்ள அரசியல் வேறுபாடுகளைக் கடந்து அன்பான, நட்பான சமூக வட்டங்களை ஈழத்தமிழர் சமூகமாக டிஜிட்டல் முறையில் கட்டியெழுப்ப வேண்டிய தேவை ஏற்படுகிறது. இத்தகைய நட்பு வட்டங்கள் பதற்றங்களையும் ஏக்கங்களையும் தனிமைப்படுத்தல்களையும் குறைக்கும் என்பது இலக்கின் இவ்வார எண்ணம்.

பெரியவர்கள் தம்மிடையுள்ள பிடிவாதக் குணங்களால் பொதுக்கட்டமைப்புக்களில் ஒன்றிணைவதில் கஷ்டங்களை அனுபவித்து வருவதால் ஈழத்தமிழரின் ஜென்சி மற்றும் அல்பா இளைய தலைமுறையினர் தங்கள் தாய் தந்தையரைப் போல ரோம் எரிகையில் பிடில் வாசித்த நீரோ மன்னராக இல்லாது உங்களாலான டிஜிட்டல் இணைப்புக்களில் இணைந்து உங்களின் பெரியவர்களையும் உலகு சந்தித்துக் கொண்டிருக்கிற இந்த இக்கட்டான காலத்தைக் கடக்க உதவ வேண்டும் என்பதே இலக்கின் எண்ணமாகவுள்ளது.

மேலும், ரஸ்ய - உக்ரேன் பேச்சுவார்த்தை அமெரிக்கக் குழுவின் மத்தியஸ்தத்துடன் நடைபெற்ற போதிலும் அதன் விளைவு வெறுமனே சிறைப்பிடிக்கப்பட்ட கைதிகள் பரிமாற்ற இணக்கமாகவும் எந்த நாடு உக்ரேனுக்கு இராணுவ உதவியாக அமைந்தாலும் அந்த நாடும் ரஸ்யாவின் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டி வருமென்ற ரஸ்ய அதிபர் விளாமிடீர் பூட்டினின் அமெரிக்க தூதுக்குழுவின் நேரடிச் சந்திப்புச் செய்தியுடன் தொடர்கிறது.

ஆனால், போர்நிறுத்தமோ அல்லது அமைதிப் பேச்சுவார்த்தையோ அங்கு பேசப்பட்டதாகச் செய்திகள் வெளிவராதது உலக அமைதி தொடர்ந்து கேள்விக்குறியாகவே தொடரப் போகின்றது என்பதை உறுதி செய்துள்ளது. ஈரானும் தேவை ஏற்படின் ஐரோப்பிய நாடுகளையும் தாக்க வேண்டி வருமென்ற எச்சரிக்கையை விடுத்ததாக வெளிவந்த செய்திகள் உலகின் பாதுகாப்பு என்பது எந்நேரத்திலும் சீர்குலையக் கூடியதாக மாறிக்கொண்டிருப்பதை தெளிவாக்கியுள்ளது.

இத்தகைய சூழலில் ஈழத்தமிழர்களின் பாதுகாப்பான அமைதியையும் வளர்ச்சிகளையும் உறுதிப்படுத்த பல ஈழத்தமிழர் செயற்பாட்டாளர்கள் உடைய கூட்டுப் பொதுச் சமூக வலைத்தளம் காலத்தின் தேவையாகிறது என்பது இலக்கின் கருத்தாக அமைகிறது. மேலும், உலகின் இந்த இக்கட்டான சூழலுக்கு நடுவில் சிறிலங்காவின் 2027ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கடந்த வாரத்தில் அதன் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வரவு செலவுத் திட்டம் அனைத்துலக நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் வழி அது தனது வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டு உயர் நடுத்தர வருமானமுள்ள நாடாகத் தன்னை உறுதிப்படுத்த 2020 முதல் இன்று வரை உதவிய பொருளாதார உறுதித்தன்மை நடவடிக்கைகளைப் பேணி, 2027 மார்ச்சில் அனைத்துலக நாணயநிதியத்தின் வேலைத்திட்ட நிறைவுக்குப் பின்னரும் அதே அனைத்துலக நாணய நிதியத்தின் புதிய வேலைத்திட்டமொன்றில் இணைந்து தொடர்வதற்கு ஏற்ற முறையில் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய முறையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பொருளாதார உறுதித்தன்மையுள் ஈழத்தமிழரின் இறைமையைச் சமத்துவமானதாக ஏற்க மறுப்பதே இலங்கைத்தீவின் பொருளாதாரச் சீரழிவுக்கான மூலக் காரணம் என்கிற உண்மை மறைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டமாக இது அமைகிறது.

அதிலும் வடக்கிற்கு பல நிதி ஒதுக்கீடுகளைச் செய்துள்ள வரவு செலவுத் திட்டமாக இது தன்னை வெளிப்படுத்துகிறது.

- யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களுக்கான நீர் வழங்கல் திட்டம் 1,000 மில்லியன் ரூபா
- வடக்கு கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கான வீடுகள் கட்டும் திட்டம் 4,000 மில்லியன் ரூபா
- பாரிய கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம் 1,800 மில்லியன் ரூபா
- வடகடல் மீன்பிடி வலைத் தொழிற்சாலையின் புனரமைப்பு 500 மில்லியன்
- மீன்பிடி நங்கூரம் இடும் தளங்களின் கட்டுமானம் மற்றும் பேசாலை மீன்பிடித் துறைமுகத்தை மேம்படுத்தல் 5,000 மில்லியன் ரூபா

என, வடக்குக்கான நேரடியான விவசாய, மீன்பிடித் துறைகளின் வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடுகளும் பொதுவான மற்றைய நிதி ஒதுக்கீடுகளில் வடக்கும் கிழக்கும் உள்வாங்கப்படக்கூடிய ஒதுக்கீடுகளான

- எல் நினோ இடர் தணிப்பு மற்றும் அவசரகால எதிர்வினை 5,000 மில்லியன் ரூபா
- நீர்ப்பாசனத் துறையில் சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொள்ளல் 200 மில்லியன் ரூபா
- வெள்ளக் கட்டுப்பாட்டுக்கான உபகரணங்களை கொள்வனவு செய்தல் 625 மில்லியன் ரூபா
- ஆடு, மாடு வளர்ப்புக்குச் சாத்தியமுள்ள மாவட்டங்களில் பண்ணைகளின் விரிவாக்கம்
- மீன் உற்பத்திப் பொருள் சந்தைப்படுத்தல் வலையமைப்பின் நவீனமயமாக்கல் 200 மில்லியன் ரூபா
- கூண்டு மீன் வளர்ப்பு 250 மில்லியன் ரூபா

என்பனவும் வரவு செலவுத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளமை எடுத்த எடுப்பிலேயே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வடக்கின் பொருளாதாரத்தில் அக்கறையுள்ள அரசாங்கம் என எண்ணவைக்கிறது. ஆனால் இந்த வடக்கு மேலான அக்கறை ஈழத்தமிழர்களின் மேலான கல்வி, வேலைவாய்ப்பு, தொழில்முயற்சிகள் வளர்ச்சிகள் என்பவற்றை அதிகரிக்கும் என்று கருத வைத்தாலும் இவை சிறிலங்காவும் இந்தியாவும் அதிக அளவிலும் சிறிலங்காவும் சீனாவும் அதற்கு அடுத்த அளவிலும் பொருளாதாரத் தேவைகளுக்குத் தேவையான சூழலை உருவாக்கும் நிதிப் பகிர்வுக்கான உத்தியென்பதே இலக்கின் கருத்தாகவுள்ளது.

சிறிலங்காவின் இன்றைய அரசாங்கத்தால் இந்தியாவுடன் ஏற்கனவே உள்ள சுதந்திர வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்காக அமைச்சரவை அலுவலர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது. என்று வரவு செலவுத்திட்டத்தில் கூறப்பட்டுள்ளது இலக்கின் கருத்துக்கு வலுச் சேர்க்கிறது. இந்த விரிவாக்கத்தில் ஈழத்தமிழர் தாயகத்தின் நிலமும் கடலும் வானும் சிறிலங்கா, இந்திய அரசாங்கங்களுக்கு தேவையான பொருளாதாரத் தளங்களாக அமைகின்றன.

இதன் விளைவே, இந்தப் பகுதிகளுக்கான இந்திய-ஈழ நில, கடல், வான் இணைப்புச் செயற்திட்டங்களாகவும் வெளிப்பட்டு வருகின்றன. இதற்கான நிதிப் பகிர்வுக்கும் நிதி முகாமைத்துவத்துக்கும் வடக்கு மாகாண சபையையும் கிழக்கு மாகாண சபையையும் அவற்றுக்கு இந்திய-சிறிலங்கா ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்த நிதிப்பகிர்வு அதிகாரங்களுடன் மீளவும் செயற்படுத்த வேண்டிய அவசரத் தேவை இந்தியாவினுடையதாக இன்று மாறிவருகிறது.

ஆனால், 39 ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய உலக அரசியல், பொருளாதாரச் சூழலில் உருவான இந்திய சிறிலங்கா உடன்படிக்கையில் ஈழத்தமிழர்களுக்குச் சாதகமாக இருந்த ஒரே அம்சமான வடக்கு-கிழக்கு இணைந்த மாகாணசபை என்பதனை நீக்கக் கோரி தேசிய மக்கள் சக்தியின் மூலவேரான மக்கள் விடுதலை முன்னணி தொடர்ந்த வழக்கில் 16.10.2006இல் வழங்கப்பட்ட தீர்ப்புத்தான் தமிழர்களின் வரலாற்றுத் தாயகமான வடக்கும் கிழக்கும் இணைந்த நிலமாகப் போர்த்துக்கல், டச்சு, பிரித்தானிய காலனித்துவங்களால் கைப்பற்றப்பட்ட நிலப்பரப்பை வடக்கு என்றும், கிழக்கு என்றும் இரண்டாகப் பிரித்து வடமாகாணசபை, கிழக்கு மாகாணசபை என்ற இன்றைய வடிவத்தை உருவாக்கியது.

இதனை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலேயே இன்றும் அநுர குமார திசாநாயக்கா வடக்கு கிழக்கு எனப் பேசி வருகின்றார். இந்நிலையில், அநுர குமார திசாநாயக்காவின் மேலுள்ள வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு வடக்கில் அவரது அரசுக்குத் தேவையான நிதியைப் பெறவும் சிங்கள பௌத்த குடியேற்றங்களை அதிகரிக்க வைத்து ஈழத்தமிழரின் இறைமை மற்றும் தேசியம் மேலும் ஒடுக்கப்படுவதற்கான சூழல்களையே வளர்க்கும் அதனை அனைத்துலக பதற்றமான அரசியல் பொருளாதார சூழ்நிலைகள் வேகப்படுத்தும் என்பதே இலக்கின் இவ்வாரக் கருத்து.

இதனால், ஈழத்தமிழரின் ஜென்சி அல்பா இளைய தலைமுறையினர் எழுந்து உலக நாடுகளில் காணப்படுவது போன்ற சனநாயகப் போராட்டங்களை முன்னெடுப்பார்கள் என்ற சிறிலங்காவின் அச்சமே வரவுசெலவுத்திட்டத்தில் பாதுகாப்பு நிதியினை வழமை போலவே கடந்த வரவு செலவுத் திட்டத்தை விட அதிகமாக ஒதுக்கியுள்ளது.

கூடவே, தொல்லியல் மற்றும் வனத்துறை வழியாக ஈழத்தமிழர் தாயகத்தை ஆக்கிரமிப்பு செய்வதற்காகவே இத்துறைகளில் பாதுகாப்புச் சேவைகளுக்கான நிதியையும் வரவு செலவுத் திட்டம் ஒதுக்கியுள்ளது. இந்நிலையில் ஈழத்தமிழரின் ஒருமைப்பாடு ஒன்றே ஈழத்தமிழரின் இறைமையை தேசியத்தைப் பாதுகாக்க ஒரே வழி என்பதனை இந்த மாவீரர் மாதத்திலாவது ஈழத்தமிழர்கள் உணர்ந்து செயற்பட வேண்டுமென்பதே இலக்கின் அழைப்பாகவுள்ளது.

ஆசிரியர்



விதுரன்

2027ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் என்பது வெறுமனே எண்களின் தொகுப்பல்ல. மாறாக,சர்வதேச நிதியத்தின் கடுமையான நிபந்த னைகள், பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மை, மற்றும் கடந்த காலத் தவறுகளிலிருந்து மீண்டெழ முயலும் நாட்டின் பொரு ளாதாரப் போராட்டத்தின் வெளிப்பாடுமாகும்.



கடந்த காலங்களில் ஏற்பட்ட பேரிடர்கள், குறிப்பாக 'தித்வா' சூறாவளியால் நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட கடுமையான உட்கட்டமைப்புச் சேதங்கள் மற்றும் விவசாய அழிவுகள் ஆகியவற்றை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயச் சூழலில் இந்த வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசின் மொத்த வருமானம், செலவீனம், பற்றாக் குறை நிலை மற்றும் துறைசார் ஒதுக்கீடுகள் ஆகியவற்றை ஆழமாக ஆராயும் போது, இது ஒருபுறம் கடுமையான நிதிக் கட்டுப்பாட்டையும், மறுபுறம் சமூகப் பாதுகாப்பையும் பேண முற்படும் கடினமான சமன்பாடாக அமைகிறது.

2027ஆம் ஆண்டிற்காக அரசாங்கம் திட்டமிட்டுள்ள மொத்த வருமானம் மற்றும் நன்கொடைத்தொகை 6,180 பில்லியன் ரூபாவாகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 15.8சதவீதமாகும்.

அதேசமயம், நாட்டின் மொத்தச் செலவீனம் 7,673 பில்லியன் ரூபாவாக அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தி யில் 19.7சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் விளைவாக ஏற்படும் அடிப்படை வரவு-செலவுப் பற்றாக்குறை 1,493 பில்லியன் ரூபாவாக அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.8சதவீதமாக அமைகிறது.

எனினும், சூறாவளி போன்ற எதிர்பாராத பேரழிவுக ளால் ஏற்பட்ட சேதங்களை மீளக் கட்டியெழுப்புவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள கூடுதல் மதிப்பீடான 260 பில்லியன் ரூபாவையும் சேர்த்தால், மொத்த பற்றாக்குறை 4.5சதவீதமாக சுமார் 1,750 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கிறது.

இந்தத் தரவுகள் எதை உணர்த்துகின்றனவெனில், இலங்கை இன்னும் தனது வருமான மூலங்களைப் போதுமான அளவு விஸ்தரிக்கவில்லை என்பதையும், அரச செலவீனங்க ளைக் கட்டுப்படுத்துவதில் தொடர்ந்தும் நெருக்கடிகளை எதிர்கொள்கிறது என்பதையும் தெளிவாகக் காட்டுகிறது.

குறிப்பாக, இந்தச் செலவினங்களில் மிகப் பெரிய சுமையாகக் காணப்படுவது கடன் வட்டி செலுத்துதலாகும். இதற்காக மட்டும் 2,643 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அதாவது அரசாங்கம் ஈட்டும் ஒவ்வொரு 100 ரூபா வருமானத்திலும் சுமார் 43 ரூபா வட்டிச் செலுத்துதலுக்கே செலவிடப்படுகிறது.


தேசிய வளங்கள் பெரும்பகுதி கடந்த காலக் கடன்களை அடைப்பதற்கே சென்று சேரும் போது, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலனுக்கான முதலீடுகள் சுருங்கு வது தவிர்க்க முடியாததாகிறது.

இருப்பினும், இந்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மூலதன முதலீடுகளுக்கு 1,750 பில்லியன் ரூபாவை (துணை மதிப்பீடுகளுடன் சேர்த்து மொத்தம் 2,000 பில்லியன் ரூபாவை) அரசாங்கம் ஒதுக்கியுள்ளமை பொருளாதார மீட்சிக்கு வித்திடும் சாதகமான அம்சமாகக் கருதலாம்.

அதிவேக நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, புதுப் பிக்கத்தக்க சக்தியூடாக மின்மயமாக்கல், கிராமப்புற உள்கட்டமைப்பு மற்றும் குடிநீர் விநியோகம் போன்ற துறைகளில் இந்த முதலீடுகள் அரசாங்கம் எதிர்பார்ப்பது போன்று பலனளிக்க வேண்டும்.

நாட்டின் நிர்வாகம், பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி உள்ளிட்ட முக்கியத் துறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி விவரங்கள்; கவனிக்கத்தக்கவையாகும்.

2027ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகளின்படி, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு அதிகூடிய நிதி கோரப்பட்டுள்ளதோடு, மாகாண சபைகள் மற்றும் பொதுமக்கள் நிர்வாகத் துறைகளுக்கும் பெருமளவி லான தொகைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.



நாட்டுப் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப் புத் துறைகளைப் பொறுத்தவரை,தேசியப் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கைப் பேணுகின்ற கட்டமைப்புகளுக்குத் தேவையான பிரதான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, பாதுகாப்பு அமைச்சுக்கு சுமார் 458 பில்லியன் ரூபாவும், சட்டம்-ஒழுங்கு மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு தொடர்பான பிரிவுகளுக்கும் உரிய நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உள்நாட்டு ஸ்திரத்தன்மை மற்றும் சர்வதேச வர்த்தகப் பாதுகாப்பிற்கு இது அவசியமெனினும், கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளுடன் ஒப்பிடும் போது பாது காப்புத்துறைக்கான ஒதுக்கீடுகள் இன்னும் நியாயமான விகிதாசாரப் பகிர்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.



மறுபுறம், சமூக நலன் மற்றும் மனித வள மேம் பாட்டின் தூண்களாக விளங்கும் சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளுக்கு அரசாங்கம் வழமைபோல முக்கியத்துவம் அளித்துள்ளதாகக் காட்டிக்கொண்டாலும், பணவீக்க உயர்வு மற்றும் நாணய மதிப்பிறக்கம் ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது இந்த ஒதுக்கீடுகள் போதுமானதாக உள்ளதா என்ற கேள்வி எழுகிறது.

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடகத்துறை சார்ந்த அமைச்சின் கீழ் ஒருங்கிணைந்த ஒதுக்கீடுகள் வழங்கப் பட்டுள்ளதோடு, சுகாதாரத்துறையின் கீழ் புதிய மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்ய 5 பில்லியன் ரூபாவும், அவசர ஊர்தி சேவைகளுக்காக 3 பில்லியன் ரூபாவும், சுகாதார ஊழியர்களின் படிகளுக்காக 16.2 பில்லியன் ரூபாவும் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன.

எனினும், பொது மருத்துவமனைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு மற்றும் அடிப்படை வசதிக் குறைபாடு களை நிவர்த்தி செய்ய இந்த நிதி எந்தளவுக்குப் போது மானதாக இருக்கும் என்பது நடைமுறைச் செயலாக்கத்தில் தான் புலப்படும்.



கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வித் துறை களுக்குக் கணிசமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு, பள்ளிக் கல்வி உள்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கலுக்காக 35 பில்லியன் ரூபாவும், பல்கலைக்கழகக் கல்வி மேம்பாடு மற்றும் மாணவர் நலனுக்காக மேலதிகப் பணமும் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

ஆனாலும், உலகளாவிய தரத்திலான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒதுக்கப்படும் நிதி மிகக் குறைவாகவே உள்ளது.

இந்த வரவு-செலவுத் திட்டமானது நுண்பாகப் பொருளாதார ஸ்திரத் தன்மையைப் பேணுவதையும், சர்வதேச நிதியத்தின் இலக்குகளைத் துல்லியமாக அடை வதையும் தனது முதன்மைக் குறியீடாகக் கொண்டுள்ளது.

ஆனால், பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைச் சுமை மற்றும் பணவீக்கம் (அக்ரோபர் 2026 நிலவரப்படி கொழும்பு பணவீக்கம் 8.3 சதவீதம்) போன்ற கடுமையான யதார்த்தங்களை இது எந்தளவுக்கு சமாளிக்கும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

வருமான வரி விலக்கு எல்லை உயர்த்தப்பட்டமை, மற்றும் அஸ்வெசும உள்ளிட்ட சமூக பாதுகாப்புத் திட்டங் களுக்கு 230 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டமை போன்ற நிவாரணங்கள் ஓரளவு ஆறுதல் அளித்தாலும், மறைமுக வரிகளின் தாக்கம் நடுத்தர மற்றும் விளிம்புநிலை மக்களைத் தொடர்ந்து நெருக்கடிக்குள்ளாக்கியே வருகிறது.

இலங்கையின் பொருளாதாரம் முழுமையான மீட்சியைப் பெற வேண்டுமானால், இறக்குமதிச் சார்புக் பொருளாதாரத்திலிருந்து ஏற்றுமதி சார்ந்த உற்பத்திப் பொருளாதாரத்திற்கு மாற வேண்டியது அவசியமாகும்.

ஆனால், அநுரகுமாரவின் மூன்றாவது வரவு-செலவுத் திட்டத்தில் உள்நாட்டு விவசாயிகளுக்கு நேரடி மானியங்கள், ஏற்றுமதியாளர் களுக்குத் தேவையான மூலப்பொருட்களுக்கான வரிச் சலுகைகள் மற்றும் சிறு, நடுத்தரத் தொழில்துறைகளை மீளுருவாக்கம் செய்வதற்கான நீண்டகால மூலதன ஊக்கத் தொகைகள் என்பன போதுமான அளவு பலப்படுத்தப் படவில்லை.

இந்நிலையில், 2027ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு-செலவுத் திட்டம் என்பது நெருக்கடிகளைச் சமாளிக் கும் இலக்கங்கள் நிறைந்தவொரு 'ஆவணமாக' மாத்திரமே பார்க்க முடிகிறதே தவிர, நாட்டை ஒரு நீண்டகாலப்

தொடர்ச்சி: பக்கம் 15



1987, ஜூலை 29 அன்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன ஆகியோருக்கு இடையில் கொழும்பில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு நாலரை மாதங்கள் கடந்த நிலையில், அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1987, நவம்பர் 14இல் 13ஆவது திருத்தம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.



இந்த 13ஆவது திருத்தம் நிறைவேறி 2026, நவம்பர் 14ஆம் திகதி (14/11/2026) 39 ஆண்டுகள் நிறைவடைகின்றன. தற்போது அந்த 13 காணாமல் ஆக்கப்பட்டுள்ளது.

1987, நவம்பர் 14 அன்று இலங்கையின் அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம் என்பது மாகாண சபைகளை உருவாக்குவதற்கும், அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கும் வழிவகுத்த ஒரு முக்கியச் சட்டமாகும்.

இந்த 13ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக, தாம் எப்படியும் இந்தியப்பிரதமரைச்சந்திக்கவேண்டும்எனச்சென்னையில் பாதுகாப்புச் சூழல் காரணமாகத் தங்கியிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான இரா. சம்பந்தன் உள்ளிட்ட தலைவர்கள், அப்போது ராஜீவ் காந்தியைச் சந்தித்து ஈழத் தமிழர்களின் உண்மை நிலையை விளக்க விரும்பினர்.

இந்தியப் பிரதமர் அதற்கான தினத்தை 1987, அக்டோபர் 28ஆம் திகதி ஒதுக்கிக் கொடுத்தார். இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு ஒரு சுவாரசியமான பின்னணியைக் கொண்டது. அதுவும் தான் திருச்சிக்கு வேறொரு நிகழ்வுக்கு வருவதாகவும், அந்த நிகழ்வு முடிந்து டில்லிக்குச் செல்லும்போது திருச்சி விமான நிலையத்திலிருந்து தாம் செல்லும் தனி விமானத்தில் ஆர். சம்பந்தன், ஏ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம் ஆகிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூவரையும் சந்திக்கலாம் என அனுமதி வழங்கியிருந்தார்.

அவர் கூறியபடியே 1987, அக்டோபர் 28 அன்று திருச்சி விமான நிலையத்தில் மூவரும் அவரின் வருகையை எதிர்பார்த்திருந்தனர். சில மணிநேரங்களால் அவர் வருகை தந்தார். பிரதமரின் தனிப்பட்ட சிறப்பு விமானமான (Special IAF Aircraft) விமானத்தில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, ஆர். சம்பந்தன், ஏ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம் ஆகிய மூவரையும் விமானத்தில் ஏற்றி, தனது பக்கத்து இருக்கையில் அமர வைத்து உரையாடிக்கொண்டே பயணத்தைத் தொடர்ந்தனர். திருச்சியிலிருந்து டில்லி சென்றடைய மூன்று மணிநேரப் பயணமும் உரையாடிய படியே சென்றனர். (அந்த நால்வரும் இப்போது உயிருடன் இல்லை.)

13ஆவது சட்டத்திருத்தம் தொடர்பான நீண்ட கடிதம் ஒன்றை ராஜீவ் காந்தியிடம் இரா. சம்பந்தன் கையளித்து கதையைத் தொடர்ந்தனர். இலங்கை அரசு தயாரித்துள்ள 13ஆவது வரைவு இந்தியாவிற்கு முன்கூட்டியே காட்டப் படாமல், தன்னிச்சையாக வர்த்தமானியில் வெளியிடப் பட்டுள்ளது.

தமிழர்களின் முக்கிய கோரிக்கைகளை உள்ளடக்காமல், ஒருதலைப்பட்சமாக இந்தச் சட்டமூலங்கள் கொண்டுவரப்பட்டதைத் தாம் ஏற்க முடியாது. அதிகாரப் பகிர்வில் உள்ள குறைபாடுகள், ஒற்றையாட்சித் தன்மை மாறாமை, முன்மொழியப்பட்ட 13ஆவது திருத்தமானது இலங்கையின் ஒற்றையாட்சி கட்டமைப்பை மாற்றவில்லை. இதனால், மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் எப்போது வேண்டுமானாலும் மத்திய அரசால் பறிக்கப் படக்கூடிய ஆபத்து இருப்பதாகச் சுட்டிக்காட்டினர்.

அத்தோடு, மாகாண சபைகளின் நிர்வாகத்தில் தலையிடவும், அவற்றை முடக்கவும் இலங்கை ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்த பரந்த அதிகாரங்கள் மாகாண சுயாட்சியை அர்த்தமற்றதாக்கும் என்று அவர்கள் கவலை தெரிவித்தனர்.

மிக முக்கியமாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பு தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகமானது. அது நிரந்தரமாக இணைக்கப்பட்டு ஒரே நிர்வாக அலகாகச் செயல்படுவதை இந்தச் சட்டமூலம் உறுதியாக உத்தரவாதம் செய்யவில்லை என்றும், தற்காலிக ஏற்பாடாக மட்டுமே அது அணுகப்பட்டதாகவும் தமது ஆட்சே பனைகளையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தினர்.

இரா. சம்பந்தன், அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம் ஆகியோருடைய உரையாடலைச் செவிமடுத்த இந்தியப் பிரதமர், இணைந்த வடகிழக்கு எப்போதும் தொடரும். அதனை இலங்கை ஜனாதிபதிகள் எவரும் விலக்கிக்கொள்ள மாட்டார்கள். தற்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர் தன தமக்கு வாக்குறுதியளித்துள்ளார். இணைப்பு 13ஆவது திருத்தச் சட்டத்தில் சேர்க்கப்படாவிட்டாலும் வடகிழக்கு மாகாண சபைதான் தொடரும். அதையிட்டு கவலை கொள்ளத் தேவையில்லை என்ற வாக்குறுதியை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சம்பந்தன் தரப்பிடம் திட்டவட்டமாகக் கூறியிருந்தார். இவர்களும் அதனை நம்பினர்.



ஆனால், ராஜீவ் காந்தி கூறியபடி 1988 தொடக்கம் 2006 வரை 18 வருடங்கள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜெய வர்தன, ஆர். பிரேமதாச, விஜயதுங்க, சந்திரிகா ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் இணைந்த வடகிழக்கு மாகாண சபையே பெயரளவில் இயங்கியது. மத்திய அரசால் வரவு செலவுத் திட்ட நிதிகள் இணைந்த வடகிழக்கு மாகாண சபைக்கே தொடர்ந்தும் அபிவிருத்திகளுக்கான நிதிகளை ஒதுக்கிய வரலாறு இருந்தது.

2005இல் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவாகி ஒன்பது மாதங்களால், 2006இல் ஜனாதிபதி மகிந்த அரசுக்கு ஆதரவு தெரிவித்த ஜே.வி.பி., தற்போதைய ஜனாதிபதி அநுர உட்பட, அவர்கள் உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து சட்டரீதியாக இணைந்த வடகிழக்கு தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது என்பது வரலாறு.

13ஆவது திருத்தச் சட்டத்தை 1987, நவம்பர் 14இல் அப்போதைய பிரதமரும் சபைத் தலைவருமான

பா.அரியநேத்திரன்

ரணசிங்க பிரேமதாச அதிகாரபூர்வமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். 1978 அரசமைப்புச் சட்டத்திற்கு 13ஆவது திருத்தமாக அது அறிவித்து, இல. 42 மாகாண சபை சட்ட மூலத்தை அறிமுகப்படுத்தியது.

13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அன்றைய வாக் கெடுப்பின்போது 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான மகிந்த யாப்பா அபேவர்தன, சந்திரகுமார் விஜேகுணவர்தன ஆகிய இருவரும் கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்ததால், அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன உடனடியாக எம்.பி. பதவிகளிலிருந்து நீக்கினார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டமூலத்தை முழுமையாக எதிர்த்து வாக்களித்தது. ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தி யாளர்களாக ஜெயவர்த்தன அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த லலித் அதுலத்முதலி மற்றும் காமினி திஸாநாயக்க போன்ற சில முக்கிய தலைவர்கள் இந்தத் திருத்தத்தின் சில சரத்துக்களை, குறிப்பாகப் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதை ஆரம்பத்தில் கடுமையாக எதிர்த்தனர். பின்னர் எதிர்த்து வாக்களிக்கவில்லை.

மக்கள் விடுதலை முன்னணி அந்தக் காலகட்டத்தில் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் இல்லாவிட்டாலும், நாடாளுமன்றத்திற்கு வெளியிலிருந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை மிகக் கடுமையாக எதிர்த்து அதனைக் கொளுத்தி எரித்துப் போராடினர். கவன ஈர்ப்புப் போராட்டங்களையும் ஆயுதமேந்திய போராட்டங்களையும், வேலை நிறுத்தங்களையும் முன்னெடுத்தனர்.

13ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் கொண்டு வரப்பட்டபோது, தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த 15 நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்திருந்ததால் நாடாளுமன்றம் செல்லவில்லை. அதற்கான காரணம் 1983, ஆகஸ்ட் 08இல் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் 06ஆவது திருத்தச் சட்டத்தின்படி, தனிநாடு கோரிக்கையை ஆதரிக்க மாட்டோம் என்ற சத்தியப்பிரமாணத்தை ஏற்க தமிழர் விடுதலைக் கூட்டணியின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் மறுத்துவிட்டனர்.

இதன் காரணமாக, 1983ஆம் ஆண்டிலேயே அவர்களின் நாடாளுமன்றப் பதவிகள் தொடர்ந்து மூன்று மாதங்கள் சபை அமர்வில் கலந்து கொள்ளாமையால் தானாகவே இழக்கப்பட்டன.

அதனால் அந்தக் காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இல்லை. 13ஆவது திருத்தச் சட்டம் 1987, நவம்பர் 14இல் நிறைவேற்றப் பட்டு சரியாக ஒரு வருடத்தால், 1988, நவம்பர் 19இல் இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் முதலாவது தேர்தல் நடைபெற்று, 1988, டிசம்பர் 05இல் முதலாவது அமர்வு

தொடர்ச்சி: பக்கம் 15



தமிழீழத் தேசத்தின் கட்டுமானத்தின் அடையாளம் தமிழீழக் காவல்துறை

தமிழீழக் காவல்துறை பற்றிய நினைவுகள் ஒவ்வொரு ஈழத் தமிழ் மக்களின் நெஞ்சகத்திலும் இனிமையாக, பசுமையாக இருக்கின்றன. நாம் ஒரு உன்னதமான நிழலர சின் கீழ் வந்தோம் என்பதில் மிகவும் கர்வமும் பெருமையும் அடைகிறவர்கள். உலகம் முழுவதும் காவல்துறை என்ற அமைப்பு குற்றத்தைத் தடுக்கவும், சட்டத்தைப் பாதுகாக்கவும் உருவாக்கப்பட்டாலும் அந்த அமைப்பு எந்த அளவுக்கு தமது தடையை செய்கின்றன என்ற கேள்வி இருக்கின்றது. இப்படியான ஒரு சூழலில் தான் தமிழீழக் காவல்துறை தலைசிறந்த ஒரு பணியை அன்றைய தமிழீழ மண்ணில் வழங்கியிருந்தது.

தமிழீழ அரசின் காவல்துறை



தமிழீழப் போராட்ட வரலாற்றில் இராணுவக் கட்டமைப்புகள் மாத்திரமின்றி தேசக் கட்டுமானப் பணியில் ஒரு சமூகத்தின் அன்றாட வாழ்வை ஒழுங்குபடுத்துவதற்காக உருவாக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்புகளும் முக்கியமானவை. போர் நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு நிலப்பரப்பில் மக்களின் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு, போக்குவரத்து, குற்றத் தடுப்பு எனப் பல்வேறு பொறுப்புகளை முன்னெடுத்த தமிழீழக் காவல்துறை அவற்றுள் தனித்துவமான இடத்தைப் பெற்றிருந்தது.

1991ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி தமிழீழக் காவல்துறைக்கெனத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக் கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. காவல் பணிக்கான அடிப்படைப் பயிற்சிகள், சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுவதற்கான நடைமுறைகள், பொதுமக்களுடன் தொடர்புகொள்ளும் முறைகள் உள்ளிட்ட விடயங்களில் அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். தொடர்ந்து, 1991 நவம்பர் 19ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு இத்துறையை உத்தியோகபூர்வமாகத் தொடங்கி வைத்தார். இதன் மூலம் போர்ச்சூழலில் தனித்துவமான காவல் நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது.

தமிழர் தேசமெங்கும் காவல் நிலையங்கள்

முன்னாள் இலங்கைக் காவல்துறை உத்தியோகத்தரான பாலசிங்கம் மகேந்திரன் எனப்படும் பா. நடேசன், தமிழீழக் காவல்துறையின் ஆரம்பகாலக் கட்டமைப்பை உருவாக்கி வழிநடத்தினார். ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் காவல் நிலையம் அமைக்கப்பட்டு, பின்னர் சுன்னாகம், சண்டிலிப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, நாகர்கோவில், பளை, வல்வெட்டித்துறை உள்ளிட்ட பல பகுதிகளுக்கும் அதன் கட்டமைப்பு விரிவுபடுத்தப்பட்டது. வன்னியில் நிர்வாகக் கட்டமைப்பு விரிவடைந்தபோது மேலும் பல காவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டன. 2003ஆம் ஆண்டு கிளிநொச்சியில் காவல்துறைத் தலைமையகமும் பயிற்சிப் பீடமும் அமைக்கப்பட்டன.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், குற்றச் செயல்களைத் தடுத்தல், முறைப்பாடுகளைப் பதிவு செய்து விசாரணைகளை முன்னெடுத்தல் ஆகியவை காவல்துறையின் பிரதான பொறுப்புகளாக இருந்தன. திருட்டு, கொலை, கொள்ளை போன்ற குற்றச்செயல்கள், குடும்ப முரண்பாடுகள், வீதி விபத்துகள் உள்ளிட்ட முறைப்பாடுகள் கையாளப்பட்டன. காவல்துறையால் விசாரிக்கப்பட்ட வழக்குகள் தமிழீழ நீதித்துறையின் கீழ் இயங்கிய நீதிமன்றக் கட்டமைப்புகளுடன் இணைக்கப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டன. இதன் மூலம் காவல் விசாரணையிலிருந்து நீதிமன்ற நடவடிக்கை வரையான ஒரு நிர்வாக நடைமுறை தமிழீழ அரசின் காலத்தில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

காவல்துறையில் பெண்கள்



காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவும் மக்களின் அன்றாட வாழ்வில் முக்கியப் பங்கு வகித்தது. நகர மையங்கள், சந்திகள், பாடசாலைகளுக்கு அருகிலான வீதிகள், மக்கள் அதிகமாகக் கூடும் இடங்கள் ஆகியவற்றில் போக்குவரத்துப் பணிகளில் தமிழீழக் காவல்துறை ஈடுபட்டது. வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துதல், வீதி விதிகளை நடைமுறைப்படுத்துதல், விபத்துகளைத் தடுப் பதற்கான அறிவுறுத்தல்களை வழங்குதல் போன்ற பணி கள் முன்னெடுக்கப்பட்டன. போர் நடவடிக்கைகளும் இடப் பெயர்வுகளும் மக்களின் இயல்பான வாழ்க்கையைப் பாதித் திருந்த காலத்திலும், அன்றாடப் போக்குவரத்தை ஒழுங்கு படுத்துவதற்கான இத்தகைய பணிகள் சிறப்பாக நடந்தன.

தமிழீழக் காவல்துறையில் பெண்களின் பங்களிப் பும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. பொதுவாக இராணு வம் மற்றும் காவல்துறையில் பெண்கள் பெயரளவில் பயன்படுத்தப்பட்ட நிலையில் தமிழீழ விடுதலைப் போராட் டம் மாறுபட்ட வரலாற்று அனுபவத்தைத் தருகிறது. அந்த வகையில் பெண் காவல்துறையினர் சீருடையணிந்து பொதுவெளியில் பணியாற்றியதுடன், பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான முறைப்பாடுகளைக் கையாள்வதி லும் பங்கேற்றனர். பொதுமக்களுடன் நேரடியாகத் தொடர்பு

தீபச்செல்வன்

கொள்ளும் பணிகளிலும் அவர்கள் ஈடுபட்டனர். பெண்கள் காவல்துறைப் பணியில் பங்கேற்றமை, போர்க்காலச் சமூகத்தில் பெண்களின் பொதுவெளிப் பங்களிப்பை வெளிப்படுத்திய ஒரு அம்சமாகவும் அமைந்தது.

போர்க்காலப் பணி

போர்க்காலத்தில் இடப்பெயர்வுகள், பொருளாதாரத் தடை கள், இராணுவ நடவடிக்கைகள் எனப் பல்வேறு நெருக்கடி கள் மக்களின் வாழ்வைச் சூழ்ந்திருந்தன. அத்தகைய சூழலில் சமூக ஒழுங்கைப் பேணுவதற்கான ஒரு நிர்வாக அமைப்பாகத் தமிழீழக் காவல்துறை இயங்கியது. எனினும், அதன் வரலாற்றை முழுமையாகப் புரிந்துகொள்ள அதன் பணிகளைமட்டும்பார்ப்பதுபோதாது.அதுதமிழீழவிடுதலைப் புலிகளின் அரசியல் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பின் ஓர் அங்கமாக இயங்கியது. அதன் செயற்பாடுகள் தொடர்பாக மக்கள் இன்றுவரை நெகிழ்ச்சியான நினைவுகளுடன் உள்ளனர். காவல்துறையும் நீதிமன்றக் கட்டமைப்பும் சமூக ஒழுங்கைப் பேணுவதில் பங்காற்றியதாகச் சில ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.



இன்று வடக்கு - கிழக்கில் போதைப்பொருள் புழக்கம், வன்முறைகள், திருட்டுகள் மற்றும் ஏனைய சமூகக் குற்றங்கள் தொடர்பாக மக்கள் அதிக கவலை வெளியிடுகின்றனர். அன்றைய போர்க்காலத்தையும் ஒப்பிடும்போது, அன்று காவல்துறை சமூகத்தை அதன் நெறிமுறைகளுக்கு அமைவாகப் பாதுகாத்ததுடன் குற்றங்களைத் தடுக்கும் வகையில் தமது பணிகளையும் ஆற்றியுள்ளன. அன்றைய சூழலில் சட்டவிரோத போதைப் பொருள் ஊடுருவல் மற்றும் சமூகப் பிறழ்வுகள் என்பன தடுக்கப்பட்டன. அத்துடன் போதைப் பொருள் இல்லாத வடக்கு-கிழக்குத் தாயகமாக அன்றைய தேசம்

தொடர்ச்சி: பக்கம் 15



மட்டு.நகரான்

இலங்கையின் பௌத்த கட்டமைப்புகளும் சிங்கள அரசுகளின் கட்டமைப்புகளும் தொடர்ச்சியாக வடகிழக்கு தமிழ் மக்களை புறக்கணித்த நிலைமையே இருந்து வருகின்றது. காலத்திற்குக் காலம் ஆட்சிக்குவரும் அரசாங்கங்கள் தங்களை நல்லவர்கள் போல் தமிழ் மக்களிடம் வேடங்களை போட்டுக்கொண்டு தமிழர்களின் வாக்குகளைப் பெற்றதன் பின்னர் அவர்கள் இனவாத நோக்குடன் செயற்பட்டு வருவதே நடந்துவருகின்றது.



வடகிழக்கு தமிழர்கள் தாயகம் என்பது தொடர்ந்தும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே நடத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக போக்குவரத்து துறையென்பது வடகிழக்கில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்ட நிலைமையே இருந்து வருகின்றது.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டிற்கும் முதுகெலும்பாகத் திகழ்வது அந்நாட்டின் போக்குவரத்துக் கட்டமைப்பாகும். இலங்கையைப் பொறுத் தவரை, தென்பகுதி மற்றும் மேல் மாகாணங்களில் அதிவேக நெடுஞ்சாலைகள், நவீன பல்நிலை போக்குவரத்து நிலையங்கள், சொகுசுப் பேருந்துகள் மற்றும் விரைவு ரயில் சேவைகள் எனப் போக்குவரத்துத் துறை பாரிய நவீன மயமாக்கலுக்கு உட்பட்டு வருகின்றது.

ஆனால், நீண்டகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீண்டெழத் துடிக்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களுக்கு நவீன போக்குவரத்து வசதிகளை வழங்கு வதில் தொடர்ந்தும் பாரபட்சம் காட்டப்பட்டு வருகின்றமை வேதனைக்குரிய விடயமாகும்.

இலங்கையின் தென்பகுதியை இணைக்கும் வகையில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை மற்றும் மத்திய அதிவேக நெடுஞ்சாலை எனப் பல நவீன வீதித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு, அவற்றின் பயன்களை அம்மக்கள் அனுபவித்து வருகின்றனர். இதன் மூலம் பயண நேரம் குறைக்கப்பட்டு, வர்த்தக மற்றும் சுற்றுலாத் துறைகள் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டுள்ளன.

ஆனால், நாட்டின் வடபகுதியையும் கிழக்குப் பகுதியையும் தலைநகருடன் இணைக்கும் அதிவேக நெடுஞ்சாலைத் திட்டங்கள் வெறும் பேச்சளவிலும், திட்டமிடல் மட்டத்திலுமே முடங்கிக் கிடக்கின்றன. இன்றும் வடகிழக்கு மக்கள் கொழும்புக்கோ அல்லது ஏனைய மாகாணங்களுக்கோ செல்வதற்குப் பல மணிநேரம் சாதாரண வீதிகளில் பயணிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பொதுப் போக்குவரத்தைப் பொறுத்தவரை, இலங்கை போக்குவரத்து சபை துறைகளில் நவீன பேருந்து கள் அறிமுகப்படுத்தப்படும்போது, அவை பெரும்பா லும் மேல் மற்றும் தென் மாகாணங்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகின்றன. தென்பகுதியில் பழுதடைந்த அல்லது பழைய பேருந்துகளே வடகிழக்கு மாகாணங்களுக்கான சேவைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகப் பொதுமக்கள் தொடர்ச்சியாகக் குற்றம் சாட்டி வருகின்றனர். அதேபோன்று, ரயில் போக்குவரத்திலும் இதே நிலையே காணப்படுகிறது.

குறிப்பாக வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் கொழும்புக்குச் செல்லும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய பஸ்கள் மிக பழமையான நிலையில் உள்ள பஸ்களே சேவையில் ஈடுபட்டுவருகின்றன. இவை சுமார் 20 வருடத்திற்கும் மேலான சேவை யில் ஈடுபடுத்தப்பட்ட பஸ்களாக காணப்படுகின்றன. இந்த பஸ்கள் கிழக்கு மாகாணத்திற்குள்ளேயே பயணிக்க முடியாத நிலையில் உள்ள நிலையில் தூர இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இதேபோன்று இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து தலைநகர் கொழும்புக்கான நீண்ட தூரப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை நடத்துவதற்கான அனுமதிப்பத்திரங்கள், தென்பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மைச் சமூகத்தவர்களுக்கு அதிகள வில் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதனால் உள்ளூர் போக்கு வரத்துச் சேவை வழங்குநர்களும் பயணிகளும் பல்வேறு பாதிப்புகளை எதிர்கொள்வதாகவும் அப்பிராந்தியப் போக்கு வரத்துச் சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகள் தொடர்ச்சி யாகக் குற்றம் சாட்டி வருகின்றன. இலங்கையின் தேசியப் போக்குவரத்துத் துறையில் நிலவும் அனுமதிப்பத்திர ஒதுக்கீட்டு நடைமுறைகள் தொடர்பான விவாதங்களில் இது ஒரு முக்கியப் பேசுபொருளாக மாறியுள்ளது.



இதேபோன்று மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கான ரயில் பாதைகள் புனரமைக்கப்பட்ட போதிலும், அவற்றில் சேவையில் ஈடுபடுத்தப்படும் ரயில் பெட்டிகளின் தரம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. அடிக்கடி ஏற்படும் ரயில் தடம்புரளல்கள், தாமதங்கள் மற்றும் குளிரூட்டப்பட்ட நவீன பெட்டிகளின் பற்றாக்குறை என்பன பயணிகளைப் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாக்குகின்றன. குறிப்பாக, இரவு நேர அஞ்சல் ரயில்களில் அடிப்படை சுகாதார வசதிகள் கூட முறையாகப் பேணப்படுவதில்லை என்பது பயணிகளின் நீண்டகாலக் குறையாகும்.



வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு புகையிரதப் பாதை, கொழும்பையும் கிழக்கு மாகாணத்தையும் இணைக் கும் பிரதான போக்குவரத்து மார்க்கமாகும். குறிப்பாக, குறைந்தகட்டணத்தில்பாதுகாப்பானமற்றும்சௌகரியமான பயணத்தை மேற்கொள்ள விரும்பும் சாதாரண பொதுமக்கள், மாணவர்கள், அரச ஊழியர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு இந்தப் புகையிரத சேவை ஒரு வரப்பிரசாதமாக இருந்து வருகின்றது. அத்துடன், மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களின் விவசாய உற்பத்திப் பொருட்களையும், மீன்பிடிப் பொருட்களையும் நாட்டின் ஏனைய பாகங்களுக்குக் கொண்டு செல்வதிலும் இச்சேவை பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றது.



இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த மட்டக்களப்பு புகையிரத சேவை, கடந்த சில தசாப்தங்களாகப் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. உள்நாட்டு யுத்த காலத்தில் பலத்த சேதங்களுக்கு உள்ளான இந்தப் புகையிரதப் பாதை, யுத்தத்தின் பின்னர் ஓரளவு புனரமைக் கப்பட்ட போதிலும், அது முழுமையான நவீன தரத்திற்கு உயர்த்தப்படவில்லை.

புகையிரதப் பாதையின் நிலைமை ஒருபுறமிருக்க, இச்சேவையில் ஈடுபடுத்தப்படும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் இயந்திரங்களின் தரமும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு நவீன குளிரூட்டப்பட்ட புகையிரதங்களும், சொகுசுப் பெட்டிகளும் அறிமுகப்படுத்தப்படுகின்ற போதிலும், மட்டக்களப்பு மார்க்கத்திற்குப் பழைய மற்றும் பழுதடைந்த பெட்டிகளே தொடர்ந்தும் வழங்கப்படுவதாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தமிழ் பகுதிகள் என்பதனால் காலத்திற்குக் காலம் ஆட்சிக்கு வரும் அரசுகள் கவனத்தில் கொள்ளாத அல்லது புறக்கணிப்பு மனநிலை யிலேயே தொடர்ந்து செயற்பட்டு வருவதாக பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்ந்து முன்வைக் கப்படுகின்றன.

வடகிழக்குமாகாணங்களின்பிரதானநகரங்களைத் தாண்டி, கிராமப்புற வீதிகளின் நிலைமை மிகவும் மோசமாகக் காணப்படுகிறது. வன்னிப் பெருநிலப்பரப்பு, கிழக்கின் பின்தங்கிய கிராமங்கள் மற்றும் தீவகப் பகுதிகளில் வாழும் மக்கள் அன்றாடப் போக்குவரத்திற்காகப் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மழைக்காலங்களில் சேறும் சகதியுமாக மாறும் வீதிகளும், உரிய நேரத்திற்கு இயங்காத பேருந்து சேவை களும் மாணவர்களின் கல்வி, நோயாளர்களின் அவசர மருத்துவத் தேவைகள் மற்றும் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தல் ஆகியவற்றைக் கடுமை யாகப் பாதிக்கின்றன. மேலும், தீவகப் பகுதிகளுக்கான நவீன படகுச் சேவைகள் மற்றும் இறங்குதுறை அபிவிருத்தி களும் போதிய கவனிப்பின்றியே உள்ளன.

பலாலி மற்றும் மட்டக்களப்பு விமான நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்பட்ட போதிலும், அவை முழுமையான சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தப்படாமல் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இயங்குகின்றன. காங்கேசன்துறை மற்றும்

தொடர்ச்சி: பக்கம் 16



செம்மணி:

இனப்படுகொலை, அரசின் பொறுப்புக்கூறல் மற்றும் இலங்கையின் மூன்றாவது இடைக்கால தொல்பொருள் ஆய்வறிக்கையின் தோல்வி

ஈழொளி

செம்மணி படுகொலைக்குழிகள் குறித்த ஈழத் தமிழர் சட்டக் கண்ணோட்டம் மற்றும் சுதந்திரமான சர்வதேச விசாரணைக்கான அவசரத் தேவை.



தமிழர் தாயகப் பகுதியான செம்மணியில் நூற்றுக் கணக்கான மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்ட நிகழ்வை, இலங்கை அரசால் ஈழத் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை, கட்டாயக் காணாமல் ஆக்கங்கள், சட்டத்திற்குப் புறம்பான படுகொலைகள் மற்றும் திட்டமிட்ட ஒடுக்குமுறை ஆகியவற்றின் வரலாற்றுப் பின்னணியில் வைத்துத்தான் ஆராய வேண்டும். அக்டோபர் 10, 2026 தேதியிட்ட மூன்றாவது இடைக்கால தொல்பொருள் ஆய்வறிக்கையானது, உயிரிழந்தவர்களின் அடையாளம், அவர்களின் இறப்புக்கான காரணங்கள் அல்லது அவர்கள் புதைக்கப்பட்ட சூழல் ஆகியவற்றை உறுதிப்படுத்தாமலேயே; தொற்றுநோய்கள், இயற்கைப் பேரிடர்கள் அல்லது முறையான அடக்கச் சடங்குகள் போன்ற விளக்கங்களை முன்வைப்பதன் மூலம் தீவிரமான சட்டச் சிக்கல்களை எழுப்புகிறது.

இத்தகைய விளக்கங்களை, தமிழ் பொதுமக்கள் காணாமல் ஆக்கப்பட்டதிலும் கொல்லப்பட்டதிலும் இலங்கை இராணுவத்திற்குத் தொடர்பு உண்டு என்ற நீண்ட காலக் குற்றச்சாட்டுகளிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. குறிப்பாக, தமிழ்ப் பள்ளி மாணவி கிரிஷாந்தி குமாரசாமியை பாலியல் வன்கொடுமை செய்து கொன்ற வழக்கில் தண்டனை பெற்ற இலங்கை இராணுவ வீரர் ஒருவர், 1998-ல் வெளியிட்ட தகவல்களின்படி, செம்மணியில் தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டு புதைக் கப்பட்டதாகக் குற்றம் சாட்டியிருந்தார்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை, செம்மணி என்பது வெறும் தொல்பொருள் கண்டுபிடிப்பு மட்டுமல்ல; இது அரசு வன்முறை குறித்த பல தசாப்தங்களாக விடை கிடைக்காத கேள்விகளின் வெளிப்பாடாகும். இதில் 2009-ல் இனப்படுகொலை உச்சத்தில் இருந்தபோது தமிழ் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அழிவுகளும், தங்கள் உறவினர்கள் கட்டாயக் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் இன்றும் துயரப்படும் குடும்பங்களின் வலியும் அடங்கும்.

மூன்றாவது இடைக்கால அறிக்கையின் ஆதார ரீதியான தோல்வி

இந்த அறிக்கையானது, அடையாளம் காணக்கூடிய 574 மனித எலும்புக்கூடுகளையும், சிதறிய நிலையில் உள்ள மனித எலும்புகளின் 51 தொகுதிகளையும் பதிவு செய்துள்ளது. மேலும், புதைக்கப்பட்ட முறைகளில் உள்ள வேறுபாடுகள் மற்றும் அங்குக் கண்டெடுக்கப்பட்ட தனிப்பட்ட பொருட்கள் குறித்தும் குறிப்பிடுகிறது. இருப்பினும், இந்தக் கண்டுபிடிப்புகள், உயிரிழந்தவர்கள் இயற்கையான காரணங்களால் இறந்தார்களா, சட்டவிரோதமாகக் கொல்லப் பட்டார்களா அல்லது வேறு ஏதேனும் சூழலில் இறந்தார்களா என்பதை உறுதிப் படுத்தவில்லை.

தொல்பொருள் ஆய்வு ரீதியாக மாற்று அனுமானங் களை முன்வைக்கலாம் என்றாலும், வரலாற்று, நோயியல் அல்லது காலவரிசை சார்ந்த ஆதாரங்கள் ஏதுமின்றி, தொற்றுநோய்களாலோ அல்லது இயற்கை பேரிடர்களாலோ மரணங்கள் நிகழ்ந்திருக்கலாம் என்று கூறுவது, அரசுக்கு இருக்கக்கூடிய குற்றவியல் பொறுப்பிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

சவப்பெட்டி போன்ற பொருட்களின் எச்சங்கள் அல்லது முறையான அடக்கச் சடங்குகளை ஒத்த அம்சங்கள் காணப்பட்டாலும், அந்த நபர்கள் அதற்கு முன்னதாகத் தடுத்து வைக்கப்படவோ, சித்திரவதை செய்யப்படவோ, கொல்லப்படவோ அல்லது கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்படவோ இல்லை என்று இதைக் கொண்டு முடிவு செய்ய முடியாது. மிக முக்கியமாக, இந்தப் புதைகுழிகள் குறித்து உறுதியான முடிவுக்கு வருவதற்குத் தற்போதைய ஆதாரங்கள் போதாது என்பதை அந்த அறிக்கையே ஒப்புக்கொள்கிறது. சட்டவிரோத மரணங்கள் தொடர்பான விசாரணைக்கான மினசோட்டா நெறிமுறையின் (2016) கீழ், விசாரணைகள் சுதந்திரமானதாகவும், பாரபட்சமற்றதாகவும், முழுமையானதாகவும்,பயனுள்ளதாகவும்,வெளிப்படையான தாகவும் இருக்க வேண்டும், குறிப்பாக மாநில அதிகாரிகள் இதில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய இடங்களில். சட்டவிரோத மரணங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் கடமையிலிருந்து தொல்பொருள் ஆய்வுகள் மட்டும் நம்மை விடுவிக்காது.

இனப்படுகொலை மற்றும் சர்வதேச குற்றவியல் பொறுப்பு

1948 ஆம் ஆண்டின் இனப்படுகொலைக் குற்றத்தைத் தடுத்தல் மற்றும் தண்டித்தல் தொடர்பான மாநாட்டின் இரண்டாம் பிரிவு, ஒரு பாதுகாக்கப்பட்ட தேசிய, இன, அல்லது மதக் குழுவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கத்துடன் செய்யப்படும் குறிப்பிட்ட செயல்களைத் தடை செய்கிறது; இதில் அக்குழுவின் உறுப்பினர்களைக் கொல்வதும், கடுமையான உடல் அல்லது மனரீதியான பாதிப்பை ஏற்படுத்துவதும் அடங்கும்.



மனித எச்சங்களைக் கண்டுபிடிப்பது மட்டும் இனப்படுகொலையை நிலைநாட்டாது; இருப்பினும், இறந்தவர்களை ஈழத் தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்ட வன்முறையுடன் தொடர்புபடுத்தும் சான்றுகள், தடைசெய் யப்பட்ட செயல்களை நிலைநாட்டுவதற்கும், தேவையான இனப்படுகொலை நோக்கம் இருந்ததா என்பதைத் தீர் மானிப்பதற்கும் பொருத்தமானதாக இருக்கலாம்.

அரசுத் தரப்பு வழக்குரைஞர் எதிர் க்ர்ஸ்டிக் வழக்கில், முன்னாள் யூகோஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம், இனப்படுகொலை நோக்கத்தை மதிப்பிடும்போது சூழ்நிலைச் சான்றுகள் மற்றும் பரந்த அளவிலான நடத்தை முறைகளின் முக்கியத்துவத்தை அங்கீகரித்தது. இதேபோல், குரோஷியா எதிர் செர்பியா (2015) வழக்கில் சர்வதேச நீதிமன்றம், நிறுவப்பட்ட நடத்தை முறைகளிலிருந்து இனப்படுகொலை நோக்கத்தை ஊகிப்பதற்கான கடினமான தரத்தை ஆய்வு செய்தது.



அதன்படி, தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இராணுவக் காவலில் வைத்தல், கட்டாயமாகக் காணாமல் ஆக்குதல், நீதி மன்றத்திற்கு அப்பாற்பட்ட மரணதண்டனைகள் மற்றும் திட்டமிட்ட துன்புறுத்தல் ஆகிய குற்றச்சாட்டுகளிலிருந்து தனித்து செம்மணி வழக்கை விசாரிக்க முடியாது.

மேலும், ரோம் சட்டத்தின் 7வது சரத்து, தேவையான கூறுகள் நிறுவப்பட்டால், கொலை, சித்திரவதை, துன்புறுத் தல் மற்றும் கட்டாயமாகக் காணாமல் ஆக்குதல் ஆகியவற்றை மனிதகுலத்திற்கு எதிரான சாத்தியமான குற்றங்களாக அங்கீகரிக்கிறது. இனப்படுகொலையைப் போலல்லாமல், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு ஒரு பாதுகாக் கப்பட்ட குழுவை அழிக்கும் நோக்கத்தை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை.

இலங்கை அரசின் பொறுப்பு

சர்வதேச சட்டம், தனிநபர் குற்றவியல் பொறுப்பை, சர்வதேச அளவில் தவறான நடத்தைக்கான அரசுகளின் பொறுப்பிலிருந்து வேறுபடுத்துகிறது. இனப்படுகொலை மாநாட்டின் முதல் பிரிவு, இனப்படுகொலையைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான கடமைகளை நிறுவுகிறது, அதேசமயம், சர்வதேச சட்ட ஆணையத்தின் அரசப் பொறுப்பு குறித்த விதிகளின் நான்காவது பிரிவு, அரசு அமைப்புகளின் நடத்தையை அரசையே சார்ந்தது எனக் குறிப்பிடுகிறது.

ஆகையால், இலங்கை இராணுவப் பணியாளர்கள் அல்லது பிற அரச அதிகாரிகள் சர்வதேச அளவில் தவறான செயல்களைச் செய்தார்கள் என்பதைச் சான்றுகள் நிலை நாட்டும் பட்சத்தில், பொறுப்பானது தனிப்பட்ட குற்றவாளிக ளைத் தாண்டி இலங்கை அரசையும் உள்ளடக்கக்கூடும்.

எனவே, ஒரு திறமையான விசாரணையானது இராணுவப் பதிவேடுகள், தடுப்புக்காவல் ஆவணங்கள், கட்டளை அமைப்புகள், சாட்சி வாக்குமூலங்கள் மற்றும் மீட்கப்பட்ட எச்சங்களுக்கும் முன்னர் அறிவிக்கப்பட்ட காணாமல் போதல்களுக்கும் இடையிலான சாத்தியமான தொடர்புகளை ஆராய வேண்டும்.

வாழ்க்கைக்கான உரிமையைப் பாதுகாக்கும் குடிசார் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையின் 6-வது பிரிவு, சட்டவிரோதமாக இருக்கக்கூடிய மரணங்கள் குறித்து திறமையான விசா ரணை நடத்தப்பட வேண்டும் என்றும் மேலும் கோருகிறது. அரசின் ஈடுபாடு குறித்த நம்பகமான குற்றச்சாட்டுகள் தீர்க்கப்படாமல் இருக்கும் நிலையில், எலும்புக்கூடு

தொடர்ச்சி: பக்கம் 16



செம்மணி கூட்டுப் புதைகுழிகள்:
உள்நாட்டு நீதியின் தோல்வியும், தண்டனையிலிருந்து தப்பிக்கும் நிலையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சர்வதேச சட்டக் கடமையும்

செல்வி
ரேணுகா இன்பக்குமார்
வழக்கறிஞர்
நியூசவுத்வேல்ஸ், அவுஸ்திரேலியா

சென்ற வாரத் தொடர்ச்சி (பாகம் மூன்று)

இனப்படுகொலை குறித்த உடன்படிக்கையின் இரண்டாம் பிரிவு,ஒருதேசிய,இன,இனக்குழுஅல்லதுமதக்குழுவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் குறிப்பிட்ட நோக்கத்துடன் செய்யப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தடைசெய்யப்பட்ட செயல்களுக்கான ஆதாரத்தைக் கோருகிறது. ஈழத் தமிழர்களுக்கு எதிரான வரலாற்று ரீதியான இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகள் தீவிரமான சர்வதேச விசாரணையைக் கோருகின்றன, ஆனால் இனப்படுகொலை என சட்டப்பூர்வமாகத் தீர்மானிக்க, அடிப்படைச் செயல்களுடன் இந்தக் குறிப்பிட்ட நோக்கத்திற்கான ஆதாரமும் தேவைப்படுகிறது.



செம்மணி குறித்த ஒரு சுதந்திரமான விசாரணை, தமிழ் பொதுமக்களுக்கு எதிரான வன்முறையின் சாத்தியமான வடிவங்கள் உட்பட, பரந்த சர்வதேச குற்றவியல் விசாரணைகளுக்குத் தொடர்புடைய முக்கியமான சான்றுகளை வழங்கக்கூடும். இருப்பினும், அது முன் தீர்மானிக்கப்பட்ட முடிவுகளால் கட்டுப்படுத்தப்படக்கூடாது. சட்டப்பூர்வமாக நிலைத்திருக்கக்கூடிய கண்டுபிடிப்புகளையும், சான்றுகள் தேவைப்படும் இடங்களில், குற்றவியல் வழக்குகளையும் ஆதரிக்கக்கூடிய உண்மைகளை நிறுவுவதே இதன் நோக்கமாகும்.

கட்டளைப் பொறுப்பு மற்றும் இராணுவ மேலதிகாரிகளின் பொறுப்புக்கூறல்

சர்வதேச குற்றவியல் சட்டம், தடைசெய்யப்பட்ட செயல்களை உடல்ரீதியாகச் செய்யும் தனிநபர்களுக்கு மட்டும் பொறுப்பைக் கட்டுப்படுத்துவதில்லை. கட்டளை அல்லது மேலதிகாரிப் பொறுப்புக் கோட்பாடு, இராணுவத் தளபதிகள் மற்றும் பிற மேலதிகாரிகள், தங்களுக்குக் கீழ் உள்ளவர்கள் செய்யும் குற்றங்களுக்காக வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளில் குற்றவியல் பொறுப்பை ஏற்கக்கூடும் என்பதை அங்கீகரிக்கிறது. ரோம் சட்டத்தின் 28வது பிரிவு, திறமையான கட்டளை அல்லது அதிகாரம், தொடர்புடைய அறிவுத் தரம் மற்றும் குற்றங்களைத் தடுக்க அல்லது அடக்க அல்லது தகுந்த அதிகாரிகளிடம் விடயங்களைச் சமர்ப்பிக்கத் தேவையான மற்றும் நியாயமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறுதல் ஆகியவை தொடர்பான தேவைகளை வகுக்கிறது.

கட்டளைப் பொறுப்பு, வழக்கமான சர்வதேச மனிதாபிமானச் சட்டத்திலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இருப்பினும் அதன் துல்லியமான கூறுகள் பொருந்தக்கூடிய சட்டக் கட்டமைப்பைப் பொறுத்தது. ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகள், தடுப்புக்காவல் வசதிகள் அல்லது சட்டவிரோதக் கொலைகளின் போக்குகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் எழும் இடங்களில் இந்தக் கொள்கை குறிப்பாகப் பொருத்தமானதாகிறது. எனவே, செம்மணி மீதான ஒரு விசாரணையானது, நேரடிக் குற்ற வாளிகளின் சாத்தியமான அடையாளங்களை மட்டும் ஆராயாமல், கட்டளை அல்லது உயர் அதிகாரத்தைப் பயன்படுத்தும் நபர்களின் ஈடுபாடு, அறிவு அல்லது சட்டப்படி தொடர்புடைய தவறுகளை ஆதாரங்கள் நிறுவுகின்றனவா என்பதையும் ஆராய வேண்டும். இத்தகைய விசாரணையில், தொடர்புடைய இராணுவ ஆவணங்கள், செயற்பாடு ஆவணங்கள், தடுப்புக்காவல் பதிவேடுகள் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் மிக முக்கியமானவையாக அமையக்கூடும்.



உயர்மட்டப் பொறுப்பு நிலைகளை உள்ளடக்கிய விசாரணையை முன்னெடுப்பதற்கான ஆதாரங்கள் இருக்கும் போது, பொறுப்புக்கூறலை கீழ்நிலை அதிகாரிகளுடன் மட்டுமே மட்டுப்படுத்த முடியாது. எவரும் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் அல்ல என்ற கொள்கையானது, இராணுவ அல்லது அரசியல் அதிகாரத்தைச் செலுத்தியவர்களுக்கும் பொருந்த வேண்டும்; இது குற்றவியல் பொறுப்பு மற்றும் அதிகார வரம்பு தொடர்பான விதிகளுக்கு உட்பட்டதாக இருக்கும்.



துணைமைக் கோட்பாடு தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கான நியாயமாக ஆகிவிட முடியாது

ரோம் சாசனம் துணைமைக் கோட்பாட்டை நிறுவுகிறது, இதன் கீழ் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தேசிய குற்றவியல் அதிகார வரம்புகளுடன் இணைந்து செயற்படுகிறது. பிரிவு 17, ஒரு நாடு ஒரு வழக்கை விசாரிக்கும்போது அல்லது வழக்குத் தொடரும்போது, நடவடிக்கைகளை மேற்கொள்வதில் உண்மையான விருப்பமின்மை அல்லது இயலாமை உள்ள சூழ்நிலைகள் உட்பட, வழக்கை ஏற்றுக்கொள்வது குறித்து குறிப்பிடுகிறது. குற்றங்களை விசாரித்து வழக்குத் தொடர்வது நாடுகளின் முதன்மைப் பொறுப்பு என்பதை இந்தக் கோட்பாடு பிரதிபலிக்கிறது, ஆனால் திறனற்ற நடவடிக்கைகள் மூலம் சர்வதேசப் பொறுப்புக்கூறலைத் தடுப்பதற்கு அரசாங்கங்களுக்கு இது நிபந்தனையற்ற உரிமையை வழங்குவதில்லை. இருப்பினும், துணைமைக் கோட்பாட்டை அதிகார வரம்பிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்.

இலங்கை ரோம் சாசனத்தில் ஓர் உறுப்பினராக இல்லை. எனவே, இலங்கைக்குள் முழுமையாக நிகழ்த் தப்படும் குற்றங்கள் மீது சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கு தானாகவே பிராந்திய அதிகார வரம்பு இல்லை. தொடர்புடைய சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு, பிரிவு 13(b)-இன் கீழ் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் பரிந்துரை அல்லது மற்றொரு செல்லுபடியான அதிகார வரம்பு அடிப்படை அவசியமாகும். நீதிமன்றத்தின் கால அதிகார வரம்பு மற்றும் பிற சட்டப்பூர்வ தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதன்படி, செம்மணி வழக்கில் சர்வதேச நீதிக்கான வாதம், உள்நாட்டு விசாரணைகள் போதுமானதாக இல்லாத போதெல்லாம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) தானாகவே தலையிடக்கூடும் என்ற தவறான அனுமானத்தின் மீது தங்கியிருக்க முடியாது.



மாறாக, சர்வதேச சமூகம், சுதந்திரமான சர்வதேச விசாரணைகள், சான்றுகளைப் பாதுகாக்கும் முயற்சிகள், பொருந்தக்கூடிய பிராந்தியத்திற்கு அப்பாற்பட்ட அதிகார வரம்பின் கீழ் நடைபெறும் உள்நாட்டு நடவடிக்கைகள் மற்றும் முறையாக அமைக்கப்பட்ட பிற சர்வதேச அல்லது கலப்பின பொறுப்புக்கூறல் ஏற்பாடுகளைக் கருத்தில் கொள்வது உள்ளிட்ட சட்டபூர்வமாக கிடைக்கக்கூடிய வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். தற்போதுள்ள நிறுவனங்களின் சட்ட வரம்புகள், அந்த வரம்புகள் செயலற்ற தன்மையை நியாயப்படுத்த அனுமதிக்காமல், ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.

சர்வதேச அதிகார வரம்பு மற்றும் சர்வதேச வழக்குத் தொடர்வதற்கான சாத்தியக்கூறு

சர்வதேச அதிகார வரம்பு, சில கடுமையான சர்வதேச குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை நோக்கிய மற்றொரு சாத்தியமான பாதையை வழங்குகிறது. இந்தக் கொள்கையின் கீழ், தேசிய நீதிமன்றங்கள், பொருந்தக்கூடிய உள்நாட்டுச் சட்டம் மற்றும் சர்வதேசச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டால், குற்றம் சாட்டப்பட்ட நடத்தை வழக்குத் தொடரும் நாட்டின் பிராந்தியத்திற்கு வெளியே நடந்திருந்தாலும் கூட, குறிப்பிட்ட குற்றங்கள் மீது குற்றவியல் அதிகார வரம்பைப் பயன்படுத்தலாம். சர்வதேச அதிகார வரம்பின் துல்லியமான நோக்கம் தேசிய சட்ட அமைப்புகளுக்கு இடையில் வேறுபடுகிறது. சில நாடுகள் குற்றம் சாட்டப்பட்டவரின் இருப்பு, வழக்குத் தொடருவதற்கான அங்கீகாரம் அல்லது பிற அதிகார வரம்பு நிபந்தனைகள் தொடர்பான தேவைகளை விதிக்கின்றன.

இருப்பினும், கடுமையான சர்வதேசக் குற்றங்களை விசாரிக்கவோ அல்லது வழக்குத் தொடரவோ பிராந்திய அரசுகள் தவறிய இடங்களில், பொறுப்புக்கூறலை நிலை நாட்டுவதற்கான ஒரு முக்கிய வழிமுறையாக உலகளாவிய அதிகார வரம்பு உருவெடுத்துள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 15




கோபிகை

அண்மையில் கிழக்கு மாகாணத்திற்குச் சென்றிருந்தேன். முல்லைத்தீவு சென்று, அங்கிருந்து புல்மோட்டை போய், திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு சென்றோம். மழைக்காலப் பயணம்... வீதிகளில் சேறும் சகதியுமான கசகசப்பும், பாலங்கள் புனரமைக்கப்படுவதால் சிறு சிரமமும் இருந்தது. எனினும், மிக மிக அழகான இயற்கை நிறைந்த பசுமைக் காட்சிகளைத் தரிசிக்கிற வாய்ப்பு கிடைத்தது. சிவப்பு மண்ணில் ஓடிய நீர்த்தாரை "செம்புலத்து நீர்" போலக் காட்சியளித்தது. அதைக் கடந்து விரிந்திருந்த புல்வெளியில் சின்னச் சின்ன பறவைகள் வந்து அமர்ந்து, தலையை ஆட்டி ஆட்டிக் கதைத்த காட்சி பார்க்கத் தெவிட்டாத ஒன்றாக இருந்தது.



முல்லைத்தீவைக் கடந்து சிறிது தூரம் பயணித்த போது, மனித நடமாட்டம் குறைந்த தார் வீதி தென்பட்டது. இரண்டு பக்கமும் வரிசை கட்டி நின்ற எருக்கலை மரங்கள், கூம்பு வடிவில் மொட்டுகளையும் விரிந்த பூப்போன்ற பூவையும் சுமந்துகொண்டு, "என்னுடைய அழகுக்கு ஈடு உண்டா மானிடா?" என்று கேட்பதுபோல நின்றன. மணி ஒன்பதைக் கடந்து விட்டது. பசி வயிற்றில் மத்தளம் போட ஆரம்பித்ததும் கண்கள் சாப்பாட்டுக் கடையைத் தேடத் தொடங்கின. எங்கே, அங்கங்கே வந்த வாகனங்களைத் தவிர கடை ஒன்றும் கண்ணில் படவே இல்லை.

சிறிது நேரப் பயணத்தின் பின்புதான் ஒரு சிறிய குடிசை போன்ற கடை தென்பட்டது. அந்த இடம் மணலாற்றை அண்டிய பகுதியாக இருக்கும் என நினைக்கிறேன். எங்கள் வேரும் வேரடி மண்ணும், வாழ்வும் வளமும் கோலோச்சிய பெருங்காடு.



இடிந்த கட்டடமும் சிதைந்த குறுந்தெருவுமாகக் கானகத்தை அண்டி இருந்த அந்த மண்ணைக் கண்டபோது, "இறங்கி எம் பாதங்களை ஒரு முறையேனும் பதிக்காது விட்டால் வாழ்வில் என்ன அர்த்தம் இருக்கப்போகிறது" என நினைத்துக்கொண்டே, "இதில தேத்தண்ணி குடிப்பம்" எனக் கூறி வாகனத்தை நிறுத்தி இறங்கினோம்.

கணவன் மனைவியாக இருவரும்தான் கடையில் நின்றனர். தேநீர் அப்போதுதான் அடுப்பில் வைக்கப்பட்டிருந்தது. மழைக்கால விறகு புகைந்துகொண்டே இருந்தது. கறி றொட்டி வாங்கிச் சாப்பிட்டோம். அம்மா சாப்பிடவில்லை. அம்மாவைப் பொறுத்தவரை, அது எப்பவுமே சரிவராத ஒன்று. பெரும்பான்மை இனக் கடைகளைப் புறக்கணிப்பது அவவின் வழமை. இரண்டு பிள்ளைகளை இந்த மண்ணுக்காக விதைத்துவிட்ட அம்மா, 2009 இற்குப் பிறகு ஒருபோதும் துயிலுமில்லம் சென்றதில்லை. சினிமாப் படம் பார்ப்பதில்லை, தேர்தலில் யாருக்குமே ஓட்டுப் போடுவதில்லை,தென்பகுதி இயற்கை அனர்த்தங்களுக்காக இரங்கி உருகுவதும் இல்லை. அம்மாவின் அகராதிப்படி, மனதுக்கு உண்மையாக இதையெல்லாம் செய்வா. நாங்களும் எதுவும் சொல்வதில்லை; அம்மாவும் அதைப்பற்றி விளக்கியதில்லை.



திருகோணமலை எதற்காக எங்களுடைய தலை நகரமாக ஒரு காலத்தில் தெரிவு செய்யப்பட்டது என்பது அந்த இடங்களைப் பார்க்கிறபோது புரிந்தது. அந்த நிலங்களின் விஸ்தீரணம், அந்த நிலங்களில் இருக்கிற செழிப்பு, அந்த மண்ணோடு ஒட்டியிருக்கிற கடற்கரையின் பளபளப்பு, இயற்கை வளமாகக் கிடைத்த நில அழகு ஆகியவை எல்லாம் பார்க்கப் பார்க்கத் திகட்டாத காட்சிகளாக இருந்தன.

புல்மோட்டை கடற்கரையில் இறங்கி, அலையோடு தவழ்ந்து வருகிற கடல் நீரில் கால் நனைத்தபோது, அது ஒரு பரவசத்தைத் தந்தது. பரந்து விரிந்திருந்த நீலக்கடலும், அதை மேவி வளைந்திருந்த பாலமும், பாலத்தை ஒட்டிய பச்சை பூசிய சிறுகாடும் மனதோடு மகிழ்ச்சி நிறைந்த உணர்வைப் பரப்பின.



புல்மோட்டை கடற்கரையில் வரிசையாக இருந்த கருவாட்டுக் கடைகள், கடற்கரையை ஒட்டிய கருவாடு காயவைக்கிற தளங்கள் பார்ப்பதற்கு வித்தியாசமாக இருந்தன. கயிறுகள் கட்டப்பட்டுக் காயவைக்கப்பட்டிருந்த கருவாட்டு வாசனை, அந்த மதிய நேரத்தில் வயிற்றில் பசியைத் தூண்டியதென்பது உண்மை.

அங்கே ஒரு விடயம் குறிப்பிட்டுக் கவனிக்கக்கூடியதாக இருந்தது. இடைப்பட்ட ஒரு இடத்தைக் கடந்து வாகனம் சென்றுகொண்டிருந்தது. அந்த இடங்களில் எல்லாம் இடத்தைக் குறிப்பிடும் அடையாளப்படுத்தல் பலகைகளை அதிகம் காணவில்லை. ஆனால், விகாரைகள் பெரிய பெரிய பலகைகளில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு, தூரத்தில் வரும்போதே தெரியும் வகையில் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன. இதை என்னவிதமாக எடுத்துக்கொள்வதெனத் தெரியவில்லை.



அடுக்கடுக்காக வைக்கப்பட்டிருந்த விறகுக் கட்டுகள், கொடி போலக் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த கருவாடுகள், சுருட்டியும் விரித்தும் வைக்கப்பட்ட வலைக் குவியல்கள், காலோடு கரகரத்த மணல் துகள்கள் இவை எல்லாவற்றோடும் வீதிகளில் பார்த்த சில காட்சிகளும் மனதோடு மழை தூவின.



இளநீர் வெட்டி நீரருந்தப்பட்ட வெற்று கோம்பைகளின் அழகும், தடிகளில் கவிழ்த்து வைக்கப்பட்டி ருந்த காட்சியும், ஒரு முழம் அளவுக்குச் சிறு சிறு துண்டுகளாக வெட்டப்பட்டு, இரண்டு மூன்று அடி உயரத்திற்கு சைக்கிளில் அடுக்கப்பட்டு விற்பனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட விறகுக் கட்டுகளும், அந்தச் சைக்கிள்களை ஓட்டிச் சென்ற முதுமை படர்ந்த மனிதர்களும் ஒரு வாழும் கதையாகவே எனக்குத் தென்பட்டனர்.

மழையும் இல்லாத, வெயிலும் இல்லாத காலநிலை, அதிகமான சத்தங்கள் அற்ற பிரயாணம் மனதை இதப் படுத்தியதோடு ஈரப்படுத்துவதாகவும் இருந்தது.

ஒரு இடத்தில் கரும்புச் சாறு விற்பனை செய்து கொண்டு இளைஞன் ஒருவர் நின்றிருந்தார். இறங்கி, கரும்புச் சாறு வாங்கிக் குடித்தோம். இயந்திரத்தில் அரைக்கப்பட்டு வெளிவந்த சாறு மிகவும் சுத்தமாகவும் சுவையாகவும் இருந்தது. ஒரு குவளை 200 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.



"இதன் கழிவுகளை என்ன செய்வீர்கள்?" என்று கேட்டபோது, அது காயவைக்கப்பட்டு விறகுக்கும் உரமாகவும் பயன் படுத்தப்படுகிறது என்று கூறினார். நல்ல ஒரு வியாபாரம். போய் வருகிற வாகனங்களில் அதிகமானவை நின்றுதான் சென்றன.

காரைதீவு கடற்கரை, விபுலானந்தர் நினைவிடம் ஆகியவற்றைக் காணக்கிடைத்தது அற்புதமான தருணங்கள். அந்தக் கிழக்கு மண்ணுக்கான பயணம் மிகவும் இனிமையானதாகக் கடந்தது. இன்பமும் இனிமையும் நிறைந்த பயணமாக அந்தப் பயணம் அமைந்தது. நான்கு நாட்கள் அங்கு உறவினரோடு கூடிக் கழித்துவிட்டு ஊர் திரும்பினோம்.

நினைவுகளின் தொகுப்பாக இதனை எழுதியுள்ளேன்.

• • •



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2027ஆம் நிதியாண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில், நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் பெருந்தோட்டத் துறையை மேம்படுத்துவதற்காகப் பல புதிய திட்டங்களும் நிதி ஒதுக்கீடுகளும் முன்வைக்கப்பட்டுள்ளது. தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை உள்ளிட்ட பயிர்ச் செய்கைகளை நவீனமயமாக்குதல் மற்றும் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் அரசாங்கம் பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அறிவித்துள்ளது.



2027 வரவுசெலவுத் திட்டத்தில் பெருந்தோட்டத் துறைசார் முக்கிய ஒதுக்கீடுகள்

எனினும், இத்தகைய திட்டங்கள் வெறும் புள்ளிவிவரங்களாக நின்றுவிடாமல், மலையக மக்களின் வாழ்வியலில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமானால், கடந்த காலத் தவறுகள் திருத்தப்பட்டு, இடைநிறுத்தப்பட்ட பணிகள் துரிதமாக நிறைவேற்றப்பட வேண்டும். நாட்டின் பெருந்தோட்டத் துறை ஏற்றுமதி வருமானத்தை 2030ஆம் ஆண்டளவில் 3 பில்லியன் டொலரிலிருந்து 5 பில்லியன் டொலராக உயர்த்தும் இலக்குடன், 2027ஆம் ஆண்டுக்கான திட்டங்களும் நிதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

2030ஆம் ஆண்டளவில் 5 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானத்தை அடைவதற்காக, 2027ஆம் ஆண்டு பெருந்தோட்டத் துறையின் அபிவிருத்திக்காக மாத்திரம் ரூபா 13,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக சிறு தேயிலைத் தோட்டத் துறையின் உற்பத்தித் திறனை (சுமார் 70% பங்களிப்பு) மேம்படுத்தும் வகையில், தெற்கு, சப்ரகமுவ, வடமேல், மேல், ஊவா மற்றும் மத்திய மாகாணங்களை உள்ளடக்கி 500 தேயிலைக் கிராமங்களை உருவாக்கும் திட்டத்திற்கு ரூபா 730 மில்லியன் ஒதுக்கப் பட்டுள்ளது.

பெருந்தோட்டதேயிலைத்தொழிலாளர்களுக்கான வீடமைப்பு திட்டம் இந்த ஒதுக்கீட்டின் ஊடாகவே மேற் கொள்ளப்பட உள்ளது. அதேநேரம் சிறு தேயிலைத் தோட்டங்களில் மீண்டும் தேயிலையைப் பயிரிடுவதற்கும் தரிசு நிலங்களில் செடிகள் நடுவதற்கும் ரூபா 820 மில்லியன் மானியமாகவும், தேயிலை உரத்துக்காக ஒவ்வொரு பைக்கு ரூபா 4,000 வீதம் வழங்குவதற்காக ரூபா 5,000 மில்லியன் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இறப்பர் துறை மேம்பாடு

கைவிடப்பட்ட முதிர்ந்த இறப்பர் பயிர்களைப் புனரமைக்க ரூபா 500 மில்லியனும், பாரம்பரியமற்ற பகுதிகளில் இறப்பர் பயிர்ச் செய்கையை ஊக்குவித்தல், புதிய மற்றும் மீள்நடுகை மானியங்களுக்கு ரூபா 650 மில்லியன் நிதியும், இறப்பர் உர மானியத்திற்காக ரூபா 1,000 மில்லியன் நிதியும் முன்மொழியப்பட்டுள்ளது. அதேநேரம் உற்பத்தித்திறன் குறைந்த தென்னந்தோட்டங்களின் உற்பத்தித் திறனை உயர்த்த ரூபா 2,500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வெளிக்கள ஓய்வறைகளை நிர்மாணித்தல், கழிவறை வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பிரஜாசக்தி நிலை யங்களைப் புனரமைத்தல் போன்ற உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ரூபா 3,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், கடந்த ஆண்டு வழங்கப்பட்ட நாளொன்றுக்கான ரூபா 200 ஊக்குவிப்புக் கொடுப்பனவு தொடர்ந்தும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த ஊக்குவிப்பு கொடுப்பனவை அடுத்த நிதியாண்டி லும் தொடர்ச்சியாக வழங்குவதற்கு தேவையான நிதி கையிருப்பில் உள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதேவேளை பெருந்தோட்ட கம்பனிகளுடனான ஒப்பந்தம் தொடர்பிலும் ஜனாதிபதி அரசாங்கத்தின் நிலைப்பாட்டை முன்வைத்தார். பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளுடனான குத்தகை ஒப்பந்தங்கள் 2045ஆம் ஆண்டில் காலாவதியாவதை முன்னிட்டு, தோட்ட உரிமை யாளர்கள் மற்றும் ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, விளைவுப்பெருக்கத்தைப் பகுப்பாய்வு செய்ய அமைச்சரவையினால் விசேட உத்தியோகத்தர் குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு அடுத்த கட்ட ஒப்பந்தம் குறித்த பரிந்து ரைகளை வழங்கும் என்ற விடயத்தையும் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதியால் முன்வைக் கப்பட்ட இத்தகைய கவர்ச்சிகரமான திட்டங்கள் வரவேற்கத் தக்கவை என்றாலும், கடந்த கால வரவுசெலவுத் திட்டங்க ளில் அறிவிக்கப்பட்ட பல திட்டங்கள் மற்றும் ஒதுக்கீடுகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்ற கசப்பான யதார்த்தத்தை மலையக மக்கள் இன்னும் எதிர்கொண்டு வருகின்றனர்.




குறிப்பாக, கடந்த முறை பெருந்தோட்ட மலையக வீடமைப்புத் திட்டத்துக்காக பாரிய அளவிலான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட போதிலும், அந்த நிர்மாணப் பணிகள் இன்னும் முழுமையாக நிறைவடையவில்லை என்பதுடன், மலையக மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான முறையான கூரை மற்றும் அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடுகள் என்ற கனவு இன்றும் கேள்விக்குறியாகவே உள்ளது. கடந்த காலங்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டாலும், உரிய கண்காணிப்பின்மை, நிர்வாகத் தாமதங்கள் மற்றும் முறையான திட்டமிடலின்மை காரணமாக அந்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டமையோ அல்லது மந்தகதியில் நடைபெற்றமையோ மக்களுக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய அநீதியாகும்.

மற்றொரு உதாரணமாக நுவரெலியா மாவட்டத் தின் பிரதான நகரங்களில் ஒன்றான ஹட்டன் நகரை புனரமைக்க 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படும் என கடந்த வரவு-செலவுத் திட்டத்தின் போது ஜனாதிபதி அறிவித்திருந்தார். எனினும் ஹட்டன் நகரின் நிலை இன்று வரையும் அவ்வாறே தொடர்கிறது.

பெருந்தோட்டத் துறையின் அபிவிருத்தி குறித் தும் ஏற்றுமதி இலக்குகள் குறித்தும் பேசும் எவரும், அந்தத் துறையின் முதுகெலும்பாகத் திகழும் மலையக மக்களின் அடிப்படை மனித உரிமைகள் குறித்தும் சிந்திக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். பல தசாப்தங்களாக இந்த நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த உழைத்து வரும் மலையக மக்களுக்கு இன்றும் மறுக்கப்பட்டு வரும் மிக முக்கியமான உரிமை காணி உரிமையாகும்.

மருதன் ராம்

தங்கள் சொந்த நிலத்திலேயே அநாதைகளாக, தோட்டக் கம்பனிகளின் தங்குமிடங்களில் வாழ்ந்து வரும் இந்த மக்களுக்குச் சட்டப்பூர்வமான காணி உரிமையும், சுதந்திரமான சொந்த நிலமும் வழங்குவது அரசாங்கத்தின் தார்மீகக் கடமையாகும். காணி உரிமை இல்லாத காரணத் தினால், அவர்களால் தமது வாழ்விடங்களை மேம்படுத்தவோ, சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடவோ அல்லது வங்கிகளில் கடன் உதவிகளைப் பெறவோ முடிவதில்லை.



அதேநேரம் காணி உரிமை இல்லாத மலையக பெருந்தோட்ட மக்களை சில பெரும்பான்மையின சிங்கள மக்கள் அடையாளப்படுத்தும் விதமும் கடந்த காலங்களில் சர்ச்சைக்குள்ளாகி இருந்தது. எனவே பொருளாதாரப் பயன்களை ஈட்டும் அதேவேளை, தோட்டத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான காணி உரிமையை உறுதிப்படுத்தாமல் நிலையான சமூக அபிவிருத்தியை அடைய முடியாது.

புதிய அரசாங்கமாவது மலையக மக்களுக்குச் சொந் தக் காணியும், அதற்கான உறுதியும் வழங்கும் துணிச்சலான நடவடிக்கைகளை இந்த வரவுசெலவுத் திட்டக் காலத்திலா வது முன்னெடுக்க முன்வர வேண்டும். சுருக்கமாகக் கூறுவதாயின், 2027ஆம் நிதியாண்டுக்கான வரவுசெலவுத் திட்டமானது பெருந்தோட்டத் துறையை நவீனமயமாக்கி, நாட்டின் அந்நியச் செலாவணியை 5 பில்லியன் டொலராக உயர்த்தும் சிறந்த இலக்கை நோக்கி வழிநடத்துகிறது.

எனினும், பொருளாதார வளர்ச்சி என்பது வெறும் ஏற்றுமதிப் பொருட்களின் எண்ணிக்கையிலோ அல்லது டொலர் மதிப்பினிலோ மட்டும் அளவிடப்படக் கூடாது. மாறாக, அந்தப் பொருட்களை உற்பத்தி செய்யும் மனிதர்க ளின் கண்ணியமான வாழ்வாதாரம், அவர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமைகள் மூலமே அது பூர்த்தியடைகிறது.

கடந்த காலங்களில் வீடமைப்புத் திட்டங்கள் பாதியிலேயே நின்றுகொண்டது போன்ற துயரங்கள் இம்முறை நிகழாதவாறு, அறிவிக்கப்பட்ட அனைத்து நிதி ஒதுக்கீடுகளும் உரிய முறையில் கண்காணிக்கப்பட்டு, நேரடியாகப் பயனாளிகளைச் சென்றடைவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன், மலையக மக்களுக்குக் காணி உரிமையை வழங்குவதன் ஊடாகவே அவர்களின் நீண்டகால அபிலாஷைகளுக்கு உண்மையான நீதி கிடைக்கும்.

இந்த வரவுசெலவுத் திட்டம் மலையக மக்களின் வாழ்வில் வெறும் வாக்குறுதிகளாக இன்றி, உறுதியான மாற்றங்களை நிகழ்த்தும் ஆவணமாக மாற வேண்டும் என்பதே ஒட்டுமொத்த மலையக மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாகும்.

• • •



NVIDIA விவகாரம்: சீன உளவுத்துறைத் தொடர்பு, சிங்கப்பூர் மற்றும் அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு அச்சுறுத்தல்

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் (Artificial Intelligence – AI) உலகளாவிய வளர்ச்சியில் முன்னணியில் இருக்கும் NVIDIA நிறுவனத்தைச் சுற்றியுள்ள உளவுத்துறை தொடர்பான சர்ச்சை, அமெரிக்கா–சீனா தொழில்நுட்பப் போட்டியில் புதிய அரசியல் மற்றும் பாதுகாப்பு விவாதங்களை உருவாக்கியுள்ளது. NVIDIA நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியான ஜென்சன் ஹுவாங் (Jensen Huang), சீன உளவுத்துறையுடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் ஆலிஸ் ஹுவாங் (Alice Huang) ஆகியோருக்கு இடையிலான தொடர்பு குறித்த ஊடக அறிக்கைகள் சர்வதேச கவனத்தைப் பெற்றுள்ளன. எனினும், குற்றச்சாட்டுகள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட உண்மைகள் தனித்தனியாக மதிப்பிடப்பட வேண்டும்.



1993ஆம் ஆண்டு ஜென்சன் ஹுவாங் உள்ளிட்ட மூன்று தொழில்நுட்ப வல்லுநர்களால் NVIDIA நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் கணினி விளையாட்டுகளுக்கான வரைகலைச் செயலாக்க அலகுகளை (Graphics Processing Units – GPU) உருவாக்கிய நிறுவனம், பின்னர் செயற்கை நுண்ணறிவு, தரவு மையங்கள் (Data Centres), உயர் செயல்திறன் கணினி முறைமைகள் (High-Performance Computing) போன்ற துறைகளில் உலகளாவிய முக்கியத்துவத்தைப் பெற்றது.

குறிப்பாக, AI மாதிரிகளைப் பயிற்றுவிக்கப் பயன்படும் மேம்பட்ட சில்லுகள் (Advanced AI Chips) தற்போது பொருளாதார மற்றும் தேசியப் பாதுகாப்பு சார்ந்த மூலோபாய வளங்களாகக் கருதப்படுகின்றன.


இதன் காரணமாக அமெரிக்காவும் சீனாவும் குறைக்கடத்தித் தொழில்நுட்பத்தில் (Semiconductor Technology) ஆதிக்கம் செலுத்துவதற்காகப் போட்டியிடுகின்றன. மேம்பட்ட AI சில்லுகள் சீனாவின் இராணுவ மற்றும் தொழில்நுட்பத் திறன்களை வலுப்படுத்தக்கூடும் என்ற கவலையின் அடிப்படையில், அமெரிக்கா குறிப்பிட்ட தொழில்நுட்பங்களின் ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகளை (Export Controls) விதித்துள்ளது.

இந்தக் கட்டுப்பாடுகளை மீறி சில்லுகள் மூன்றாம் நாடுகள் வழியாகச் சீனாவை அடைகின்றனவா என்பதும் அமெரிக்க அதிகாரிகளின் கவனத்தில் உள்ளது.

இந்தச் சூழலில் ஆலிஸ் ஹுவாங் தொடர்பான குற்றச்சாட்டுகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. ஊடக அறிக்கைகளின்படி, அவர் சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட Megaspeed நிறுவனத்துடன் தொடர்புடையவராக இருந்துள்ளார்.

சீனாவின் அரசுப் பாதுகாப்பு அமைச்சகத்துடன் (Ministry of State Security – MSS) தொடர்பு இருந்திருக்கலாம் என அமெரிக்கப் புலனாய்வுத் தரப்புகள் சந்தேகித்ததாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. ஜென்சன் ஹுவாங்குடனான அவரது தொடர்பு, NVIDIA நிறுவனத்தின் உயர் மட்டத் தகவல்களைப் பெறுவதற்கான முயற்சியாக இருந்திருக்கலாம் என்ற சந்தேகங்களும் ஊடகங்களில் முன்வைக்கப்பட்டுள்ளன.


ஆனால், இத்தகைய குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்ட உண்மைகளாகக் கருதப்படக் கூடாது. சிங்கப்பூரின் பங்கு இவ்விவகாரத்தில் முக்கியமானது. தென்கிழக்காசியாவின் (Southeast Asia) முக்கியமான நிதி, வர்த்தக மற்றும் தொழில்நுட்ப மையமாக விளங்கும் சிங்கப்பூர்,



உலகளாவிய குறைக்கடத்தி விநியோகச் சங்கிலியில் (Semiconductor Supply Chain) முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

Megaspeed வழியாக வாங்கப்பட்ட NVIDIA சில்லுகள் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை மீறி வேறு நாடுகளுக்கோ சீனாவுக்கோ மாற்றப்பட்டனவா என்ற கேள்வி விசாரணையின் மையமாக உள்ளது. அதேவேளை, சிங்கப்பூர் அரசு வெளியிட்ட விளக்கங்களையும் விசாரணையின் அதிகாரப்பூர்வ நிலைப்பாட்டையும் தனித்தனியாகக் கவனிக்க வேண்டும்; ஊடகச் செய்திகளை மட்டும் கொண்டு ஒருவரை உளவாளி என முடிவு செய்ய முடியாது.

அமெரிக்கப் புலனாய்வு அமைப்புகளின் பங்களிப்பும் கவனிக்கத்தக்கது. CIA (Central Intelligence Agency) வெளிநாட்டு உளவுத் தகவல் சேகரிப்பில் ஈடுபடுகிறது; FBI (Federal Bureau of Investigation) அமெரிக்காவுக்குள் எதிர்-உளவு (Counterintelligence) மற்றும் கூட்டாட்சி குற்ற விசாரணைகளை மேற்கொள்கிறது.



இவ்வமைப்புகள் தொடர்பான கண்காணிப்பு அல்லது விசாரணை நடவடிக்கைகள் குறித்த செய்திகள் வெளியாகியிருந்தாலும், CIA நேரடியாக ஜென்சன் ஹுவாங்கைக் கண்காணித்தது என்று உறுதிப்படுத்தப்பட்ட பொதுத் தகவல் இல்லாவிட்டால் அதனை உண்மையாக எழுத முடியாது.

முக்கியமாக, NVIDIA நிறுவனத்தின் வர்த்தக ரகசியங்கள் (Trade Secrets), சிப் வடிவமைப்புகள் அல்லது AI தொழில்நுட்பத் தகவல்கள் சீனாவுக்குக் கசிந்தன என்பதற்கான உறுதியான, பொதுவில் சரிபார்க்கப்பட்ட ஆதாரம் தேவை. சந்தேகம், உளவுத்துறை மதிப்பீடு, ஊடக அறிக்கை, அதிகாரப்பூர்வ விசாரணை ஆகியவை வெவ்வேறு ஆதார நிலைகளைக் குறிக்கின்றன.

A.M.L லம்பேட்

எனவே, தகவல் கசிவு நடந்துவிட்டதாக முடிவு செய்வதற்குப் பதிலாக, விசாரணைகள் என்ன நிரூபிக்கின்றன என்பதைப் பொறுத்திருக்க வேண்டும்.

எதிர்காலத்தில் இந்த விவகாரம் அமெரிக்கா–சீனா தொழில்நுட்ப உறவுகள் (US-China Technology Relations), உளவுத்துறைப் போட்டி (Intelligence Competition), பொருளாதாரப் பாதுகாப்பு (Economic Security) மற்றும் சர்வதேச வர்த்தகக் கட்டுப்பாடுகள் (International Trade Controls) ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். அமெரிக்கா சில்லுகளின் இறுதிப் பயன்பாட்டைக் கண்காணிக்கும் விதிகளை மேலும் கடுமையாக்கலாம்; நிறுவனங்கள் வாடிக்கையாளர் சரிபார்ப்பு (Customer Due Diligence), ஏற்றுமதி இணக்கப்பாடு (Export Compliance) மற்றும் விநியோகச் சங்கிலி வெளிப்படைத்தன்மை (Supply-Chain Transparency) ஆகியவற்றில் கூடுதல் முதலீடு செய்ய வேண்டியிருக்கலாம்.



சீனாவும் உள்நாட்டு சிப் உற்பத்தி மற்றும் தொழில்நுட்பத் தன்னிறைவை விரைவுபடுத்த முயற்சிக்கலாம். இறுதியாக, NVIDIA விவகாரம் ஒரு நிறுவனத்தைச் சுற்றிய சர்ச்சையைத் தாண்டி, தொழில்நுட்ப ஆதிக்கம், தேசியப் பாதுகாப்பு மற்றும் உலகளாவிய அதிகாரச் சமநிலை (Global Balance of Power) ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருப்பதை வெளிப்படுத்துகிறது. இதன் உண்மையான தாக்கம், அதிகாரப்பூர்வ விசாரணைகளில் வெளிவரும் ஆதாரங்கள், சிங்கப்பூரின் சட்ட நடவடிக்கைகள் மற்றும் அமெரிக்கா-சீனா மூலோபாய உறவுகளின் அடுத்தகட்ட மாற்றங்கள் ஆகியவற்றைப் பொறுத்தே அமையும்.

மேற்கோள் மற்றும் மேலதிக வாசிப்பு

Singapore Ministry of Home Affairs – அதிகாரப்பூர்வ விளக்கங்கள்: https://www.mha.gov.sg/

Reuters – NVIDIA, சிங்கப்பூர் மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் தொடர்பான செய்தி அறிக்கைகள்: https://www.reuters.com/

The Straits Times – சிங்கப்பூர் தொழில்நுட்ப வர்த்தகம் தொடர்பான செய்தி அறிக்கைகள்: https://www.straitstimes.com/

Associated Press – தொடர்புடைய விசாரணை மற்றும் ஊடக அறிக்கைகள்: https://apnews.com/

• • •



அமெரிக்க இடைக்காலத் தேர்தல்களுக்குப் பிறகு இந்தியாவுக்கு என்ன மாற்றங்கள் ஏற்படும்?

அமெரிக்க இடைக்காலத் தேர்தல் முடிவுகள் இந்தியாவுக்கு உடனடி மற்றும் உறுதியான பலன்களைத் தராவிட்டாலும், நீண்ட கால அடிப்படையில் இயற்றப்படும் சட்டங்கள் இந்தியாவின் நலன்களுக்குச் சாதகமாக அமைய வாய்ப்புள்ளது.



அமெரிக்க வாக்காளர்கள் செனட் மற்றும் காங்கிரஸ் அவைகளின் கட்டுப்பாட்டை ஜனநாயகக் கட்சியினரிடம் ஒப்படைத்துள்ளனர்; இது அதிபர் டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகத்திற்கு விடுக்கப்பட்ட ஒரு கண்டனமாகும். இந்தத் தேர்தல் முடிவு, ட்ரம்பின் பதவிக்காலத்தின் எஞ்சிய பாதியில் வாஷிங்டனில் கொள்கை ரீதியான நிச்சயமற்ற தன்மையையும், அரசியல் முட்டுக்கட்டையையும் உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை, இனி வரப்போகும் சூழல் கலவையான விளைவுகளைக் கொண்டிருக்கக்கூடும். பல விவகாரங்களில் ட்ரம்பின் நிர்வாகத்தின் அணுகுமுறை மாறாமல் இருக்கலாம்; ஆனால், எதிர்காலத்தில் இயற்றப்படக்கூடிய சில சட்டங்கள், குறிப்பாக குடியேற்றம் தொடர்பான விஷயங்களில், இந்தியாவின் நலன்களுக்குச் சாதகமாக அமைய வாய்ப்புள்ளது.

அரசியல் ரீதியாகச் சிக்கலான சூழல்களை எதிர்கொள்ளும்போது ட்ரம்ப் ஆக்ரோஷமாகச் செயல்படும் போக்கு கொண்டவர் என்பதால், வர்த்தகம் மற்றும் சுங்க வரிகள் தொடர்பான விவகாரங்களில் நிச்சயமற்ற சூழல் நீடிக்கும். இந்தியா-அமெரிக்க உறவில் உள்ள முக்கிய விவகாரங்கள் என்னென்ன, இடைக்காலத் தேர்தல் முடிவுகள் அவற்றை எவ்வாறு பாதிக்கக்கூடும் என்பதை இங்கே காண்போம்.

அமெரிக்க அதிபரால் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ளவும், வர்த்தகப் பங்காளிகளுக்குச் சில வாக்குறுதிகளை வழங்கவும் முடியும். இதற்காக ட்ரம்ப் நிர்வாக உத்தரவுகளை (executive orders) பயன்படுத்தக்கூடும்.

இருப்பினும், வர்த்தக ஒழுங்குமுறைகளை வகுப்பதற்கும், சுங்க வரிகளை விதிப்பதற்கும் தேவையான அதிகாரம் காங்கிரஸிடமே உள்ளது. இந்தியாவுடன் பல மாதங்களாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வரும் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தில், அமெரிக்கச் சட்டங்களில் மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதில் காங்கிரஸின் பங்களிப்பு தேவைப்படும்.

வர்த்தக ஒப்பந்தங்களுக்குக் காங்கிரஸின் ஒப்பு தலை விரைவாகப் பெறுவதற்கு 'வர்த்தக மேம்பாட்டு அதிகாரம்' (Trade Promotion Authority - TPA) ஒரு பாரம்பரிய வழியாக இருந்தது. பேச்சுவார்த்தைக்கான இலக்கு களை வகுக்கவும், சட்டமியற்றும் செயல்முறையை விரைவு படுத்தவும் காங்கிரஸுக்கு அனுமதி அளித்த இந்த TPA, 2021-ல் காலாவதியானது. தற்போது, அந்த விரைவு நடை முறையைப் பயன்படுத்தும் வாய்ப்பு நிர்வாகத்திடம் இல்லை.

இந்தியா-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தமானது, சுங்க வரி மாற்றங்களைத் தாண்டி, நிர்வாகத்தின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட வாக்குறுதிகளை உள்ளடக்கியதாக இருந்தால், அதற்கு காங்கிரஸின் ஒப்புதலைப் பெற வேண்டி யிருக்கும். ஒப்பந்தத்தின் நுணுக்கமான அம்சங்களைப் பொறுத்து, இந்தச் செயல்முறை நீண்ட காலம் எடுக்கக்கூடும்.

'ரஸ்யா மற்றும் ஈரான் மீதான தடைகள் சட்டம்' (Sanctioning Russia and Iran Act), ரஸ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் அல்லது இயற்கை எரிவாயுவை வாங்கும் நாடுகள் மீது 100% வரை சுங்க வரி விதிக்கும் பரந்த அதிகாரத்தை அமெரிக்க அதிபருக்கு வழங்குகிறது. இதில் இந்தியாவும் அடங்கும்; இருப்பினும், தற்போதைய சூழலில் 'தேசிய நலன்' என்ற அடிப்படையில், ட்ரம்ப் இந்தியாவுக்கான அபராத நடவடிக்கைகளுக்கு விலக்கு அளித்துள்ளார். ரஸ்ய எண்ணெயின் முக்கிய வாங்குநர்களில் ஒன்றாகத் தொடர்ந்து நீடிக்கும் புது தில்லியிடமிருந்து வர்த்தகச் சலுகைகளைப் பெறுவதற்கான ஒரு பேரம் பேசும் கருவியாக, அவர் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தக்கூடும்.

ஒருவேளை 100 சதவீத இறக்குமதி வரி விதிக்கப் பட்டால், அது இந்தியாவின் ஏற்றுமதிக்கு மிகப்பெரிய பின்னடைவாக அமையும்.

பொதுவாகவே, ஜனநாயகக் கட்சியினர் இறக்குமதி வரி விதிக்கும் முறைக்கு எதிரானவர்கள். இருப்பினும், உக்ரைன் மோதல் நீடித்து வரும் சூழலில், ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள நாடாளு மன்றம், ரஸ்யாவுக்கு எதிராக மேலும் கடுமையான நடவடிக் கைகளை எடுக்க வலியுறுத்தக்கூடும்.

எரிபொருள் விலையைக் குறைக்க இந்தியாவின் சுத்திகரிப்புத் திறன் தங்களுக்குத் தேவை என்பதை, அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ சமீபத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். அதே வேளையில், தற்போது அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் உள்ள வெனிசுலாவிலிருந்து அதிக அளவில் கச்சா எண் ணெயை இந்தியா வாங்க வேண்டும் என்றும் அமெரிக்க நிர்வாகம் விரும்புகிறது. ரஸ்ய கச்சா எண்ணெயைச் சார்ந்திருப்பதிலிருந்து இந்தியாவை விடுவிப்பதே இந்த நிர்வாகத்தின் நோக்கம்; இது ஜனநாயகக் கட்சியினரின் கொள்கையோடும் ஒத்துப்போகிறது.

"ரஸ்ய கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை வாங்குபவர்கள் மீது கடுமையான விளைவு களை ஏற்படுத்தும் வகையில், சட்டமியற்றும் பிரிவும் நிர்வாகப் பிரிவும் இணைந்து செயற்படுவது மிக அவசியமா கும்" என்று ஜனநாயகக் கட்சி செனட் உறுப்பினர்களான ஜீன் ஷாஹீன் மற்றும் ரிச்சர்ட் புளூமெந்தல் ஆகியோர் இரு கட்சிகளின் சார்பாக விடுத்த கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இது புது தில்லிக்கு ஒரு மோசமான செய்தியாக அமையலாம்.

இருப்பினும், இந்திய நிறுவனமான ரிலையன்ஸ், டெக் சாஸில் 300 பில்லியன் டாலர் மதிப்பிலான புதிய சுத்திகரிப்பு ஆலை ஒன்றில் முதலீடு செய்து வருகிறது. இது கடந்த 30 ஆண்டுகளில் அமெரிக்காவில் அமைக்கப்படும் முதல் சுத்திகரிப்பு ஆலையாக இருக்கும். ரஸ்ய கச்சா எண்ணெய் கொள்முதல் தொடர்பான விவகாரத்தில் ஏதேனும் சமரசம் ஏற்படுமானால், அது அரசியல் காரணங் களை விட, இந்த முதலீட்டு விவகாரத்தையே பெரிதும் சார்ந்திருக்கக்கூடும்.

அரசியல் ரீதியாக பலவீனமடைந்துள்ள ட்ரம்ப், தனது விருப்பத்தைச் செயல்படுத்த மிரட்டும் அணுகு முறையைக் கையாளக்கூடும். அதாவது, அதிக சலுகைகளை வழங்காமல், இந்தியாவுடன் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்ள அவர் அழுத்தத்தை அதிகரிக்க லாம். ஆனால், இந்தியா இதற்குப் பணிய வாய்ப்பில்லை.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், தங்களுக்குச் சாதகமற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்குப் பதிலாக, ட்ரம்ப்பின் பதவிக் காலம் முடியும் வரை காத்திருக்க இந்தியா தயாராக இருப் பதாக அமெரிக்காவிடம் தனிப்பட்ட முறையில் தெரிவித்த தாக 'ப்ளூம்பெர்க்' செய்தி வெளி யிட்டிருந்தது.

தமிழில்: **ஆர்தீகன்**

புது தில்லி இந்தச் செய்தியை மறுத்தாலும், இந்திய விவசாயிகளின் நலன்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்பட அனுமதிக்க மாட்டோம் என்று இந்திய வர்த்தக அமைச்சர் தெரிவித்தார்.

ட்ரம்ப்பின் அழுத்தத் திற்கு மற்ற நாடுகளும் பணி யாது என்ற எதிர்பார்ப்பு, புது தில்லியின் கணக்கீடுகளில் ஒன்றாக இருக்கலாம்.

எப்படியிருப்பினும், பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கத்தைப் பொறுத்தவரை, ட்ரம்ப்பைத் திருப்திப் படுத்த வேண்டிய கட்டாயம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய இராச்சியம் மற்றும் நியூசிலாந்து ஆகியவற்றுடன் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்வதன் மூலம், அமெரிக்கச் சந்தையைச் சார்ந்திருக்கும் நிலையை இந்தியா குறைத்து வருகிறது. மேலும், பல நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களை உருவாக்குவதற்காக சுமார் மூன்று டஜன் நாடுகளுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.



ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள அமெரிக்க நாடாளுமன்றம், இந்தியாவுடனான அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் போக்கை இன்னும் தெளிவுபடுத்தும் என்றும், அமெரிக்க நிர்வாகத்தின் கணிக்க முடியாத செயல்பாடுகளுக்கு ஒரு சமநிலையை ஏற்படுத்தும் என்றும் கருதப்படுகிறது. ஜனநாயகக் கட்சியினர் இந்தியா வைச் சீனாவுக்கு எதிரான ஒரு சமநிலையாகக் கருதுகின்ற னர்; இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் இந்தியா இன்னும் பெரிய பங்கினை வகிக்க முடியும் என்று அவர்கள் நம்பு கின்றனர்.

இதற்கு மாறாக, ட்ரம்ப் நிர்வாகம் இந்தியாவை, அதிபரின் இந்தோ-பசிபிக் தொலைநோக்குப் பார்வையில் ஒரு தவிர்க்க முடியாத தூணாகக் கருதவில்லை. சீனா குறித்து அவர்களுக்கு அச்சங்கள் இருந்தாலும், அந்த நாட்டைப் புறக்கணிக்க முடியாத ஒரு முக்கியமான போட்டி யாளராகவே அவர்கள் பார்க்கின்றனர்.

ஆசியாவில் வேறொரு நாடு, அமெரிக்காவின் ராணுவ மற்றும் தொழில்நுட்ப வலிமைக்குச் சவால் விடுக்கும் நிலைக்கு வருவதை அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்கள் விரும்பவில்லை; இதற்கு முக்கியக் காரணம், இந்தத் துறைகளில் சீனா அடைந்துள்ள முன்னேற்றங்களே ஆகும். "இருபது ஆண்டுகளுக்கு முன்பு சீனா விஷயத் தில் நாங்கள் செய்த அதே தவறுகளை மீண்டும் செய்யப் போவதில்லை என்பதை இந்தியா புரிந்துகொள்ள வேண் டும்" என்று வெளியுறவுத்துறை துணைச் செயலாளர் கிறிஸ்டோபர் லாண்டோ மார்ச் மாதம் தெரிவித்தார்.

ஒப்பந்தங்களை உருவாக்குவது ட்ரம்ப்பின் அரசி யல் தத்துவத்தின் ஒரு முக்கிய அங்கமாக இருப்பதால், அமெரிக்கா தனது கோரிக்கைகளை ஏற்குமாறு இந்தியா மீது தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும்.

இடைக்காலத் தேர்தல் முடிவுகள் அமெரிக்காவின்

தொடர்ச்சி: பக்கம் 16

காத்திருப்புகள் முடிந்தது - மீண்டும் போர்க்களமாகுமா பாரசீக வளைகுடா?



இஸ்ரேலிய பொது ஒளிபரப்பு நிறுவனமான KAN, இந்த புதன்கிழமை (11), இடைக்காலப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் பாதுகாப்பு அமைச்சரவை, ஈரான் மீதான சாத்தியமான தாக்குதலுக்கான தயாரிப்புகளைத் துரிதப்படுத்துமாறு இராணுவத்திற்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்தது.



தற்போது, நெதன்யாகுவின் வழியில் நிற்கும் ஒரே உண்மையான தடையாக இருப்பது இஸ்ரேலிய பாதுகாப்புப் படையின் (IDF) தலைமைத் தளபதி, லெப்டினன்ட் ஜெனரல் எயால் ஜமீர் ஆவார். அவர் மீண்டும் ஒருமுறை மூடிய கூட்டங்களில் இந்த நடவடிக்கைகளை எதிர்த்தார்.

ஜமீரின் மதிப்பீடு முற்றிலும் நடைமுறை சார்ந்தது: உள்நாட்டு அரசியல் நிச்சயமற்ற தன்மை மற்றும் அமெரிக்க ஆதரவின்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இப்போது ஒரு தாக்குதலை நடத்துவது விவேகமற்றது.

இராணுவத் தலைமைக்கும் அரசியல் அமைச்சர வைக்கும் இடையிலான பிளவை பகிரங்கமாக அம்பலப் படுத்தும் போரை மீண்டும் தொடங்கும் திறன் கொண்ட ஒரு நடவடிக்கைக்கு எந்தப் படைகளையும் நகர்த்துவதற்கு முன்பு, ஆழமான விவாதங்களையும், உறுதியான சட்டப் பின்புலத்துடன் கூடிய முறையான, கையொப்பமிடப்பட்ட உத்தரவுகளையும் அவர் கோரினார்.

இஸ்ரேலின் அதிகாரப் படிநிலையின்படி, தலை மைத் தளபதி குடிமை அரசாங்கத்திற்குக் கீழ்ப்பட்டவர் மற்றும் சட்டப்பூர்வ உத்தரவுகளை நிறைவேற்ற வேண்டும். இருப்பினும், அரசியல் தலைமை கடுமையான முறையான மற்றும் சட்டப்பூர்வ நடைமுறைகளைப் பூர்த்தி செய்தால் மட்டுமே, ஒரு போரைத் தூண்டும் தாக்குதலை நடத்த அவர் கடமைப்பட்டுள்ளார். இந்த எதிர்ப்பைத் தொடர்ந்து, நெதன்யாகு மீண்டும் ட்ரம்பிற்கு அழுத்தம் கொடுத்தார்.

இஸ்ரேலிய செய்தித்தாளான Ynet-இன் படி, ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தும் அதே வேளையில் குண்டுவீச்சுகளை மீண்டும் தொடங்க ட்ரம்ப் மறுப்பதால், கடந்த வார இறுதியில் இருவருக்கும் இடையே மிகவும் பதட்டமான தொலைபேசி உரையாடல் நடந்தது. வெளிப்படையாக, எந்தவொரு ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை, ஏனெனில் ட்ரம்ப் டெஹ்ரானைப் பொருளாதார ரீதியாக முடக்குவதிலேயே ஆர்வம் காட்டுகின்றார்.

நவம்பர் 10 அன்று வெளியிட்ட அறிக்கைகளில், ஈரானின் அண்டை நாடுகளான சவூதி அரேபியா, கத்தார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவற்றின் வேண்டு கோளின் பேரில் புதிய தாக்குதல்களை நிறுத்தி வைப்பதாக ட்ரம்ப் தெரிவித்தார். ஏனெனில், அந்த நாடுகள் மேலும் பொருளாதார அழிவு மற்றும் ஹோர்முஸ் ஜலசந்தியில் முற்றுகைகள் ஏற்படும் என்று அஞ்சுகின்றன.

நெதன்யாகுவின் திட்டங்களை உன்னிப்பாகக் கவனிக்கையில், அவரது நிலைப்பாடு உள்நாட்டு அரசியல் பிழைப்பும், அமெரிக்காவை மீண்டும் போருக்குள் இழுப் பதற்கான ஒரு திட்டமிட்ட முயற்சியும் கலந்தி ருக்கிறது.

ட்ரம்பின் அனுமதி இல்லாமலேயே, சமீபத்தில் இரண்டு முறை அவர் தாக்குதல்களுக்குத் தயாராகியிருந்தார் என்பதுதான் கவனிக்கத்தக்கது.

தி டைம்ஸ் ஆஃப் இஸ்ரேல் பத்திரிகையின்படி, ட்ரம்பின் நேரடி எதிர்ப்பைச் சந்தித்தபோது மட்டுமே பின்வாங்கிய நெதன்யாகு, 2026 அக்டோபர் 10 அன்று ஈரானின் அணுசக்தி மற்றும் உள்கட்டமைப்பு இலக்குகள் மீது ஒரு பெரிய தாக்குதலைத் திட்டமிட்டிருந்தார்.

மற்ற பாதுகாப்புத் தலைவர்களின் ஒப்புதல் இல்லாமல், அக்டோபர் 27 தேர்தலுக்கு முந்தைய நாள், நெதன்யாகுவும் மொசாட் தலைவர் ரோமன் கோஃப்மேனும் மற்றொரு தன்னிச்சையான நடவடிக்கைக்குத் தயாரானதாக இஸ்ரேலிய சேனல் 12 செய்தி வெளியிட்டது.

அதனை வாஷிங்டன் அறிந்து கொண்டதால் மட்டுமே அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது; அதைத் தடுக்க வாஷிங்டன் தலையிட்டது. இராணுவக் கண்ணோட்டத்தில், இது முற்றிலும் ஒரு தவறான முடிவு.

ஒரு பெரும் குண்டுவீச்சுத் தாக்குதலைத் தொடரத் தேவையான வான்வழி எரிபொருள் நிரப்பும் டாங்கர்கள் இஸ்ரேலிடம் இல்லை. மேலும், ஐந்து நாட்களுக்கு மேல் நீடிக்கும் ஒரு தீவிரமான போருக்குத் தேவையான தற்காப்பு அல்லது தாக்குதல் ஆயுதங்கள் அதனிடம் போதுமான அளவில் இல்லை.

இதன் பின்னணியில் உள்ள அரசியல் கணக்கு மிகவும் நேரடியானது. அக்டோபர் 27 நாடாளுமன்றத் தேர்த லில் தனது பெரும்பான்மையை இழந்த பிறகு, நெதன்யாகு இடைக்கால அடிப்படையில் மட்டுமே ஆட்சி செய்து வருகிறார்.

அதே நேரத்தில், எதிர்க்கட்சித் தலைவர் காடி ஐசன்கோட், ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக்கின் ஆணையின் கீழ் ஒரு புதிய கூட்டணியை அமைக்க முயற்சிக்கிறார்.

புதிய அமைச்சரவை பதவியேற்கும் வரை தேவையற்ற இராணுவ நடவடிக்கைகளைத் தவிர்க்குமாறு ஐசன்கோட் நெதன்யாகுவை பகிரங்கமாக வலியுறுத்தினார். நாட்டை உச்சகட்ட எச்சரிக்கை நிலையில் வைத்திருப்பது அல்லது ஒரு பெரிய மோதலை மீண்டும் தூண்டிவிடுவது, எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை அமைக்கும் திறனைச் சீர்குலைப்பதோடு, நெதன்யாகுவின் வெளியேற்றத்தையும் தாமதப்படுத்துகிறது.

இந்தத் தேக்கநிலையின் காரணமாக, வரும் வாரங்களில் ஐசன்கோட் ஒரு கூட்டணியை அமைக்கத் தவறினால், ஆட்சி அதிகாரம் மீண்டும் நெதன்யாகுவிடம் திரும்பும் அல்லது 2027-ல் புதிய தேர்தல்களை நடத்த நிர்பந்திக்கப்படும். இது, இந்த முழு செயல்முறை முழுவதும் அவரைப் பிரதமர் பதவியில் நீடிக்கச் செய்யும்.

தற்போது இராணுவப் போர் தீவிரமடைவது இரண்டு நோக்கங்களுக்கு உதவுகிறது: அது இஸ்ரேலுக்குள் எதிர்க்கட்சிகளின் கூட்டணிப் பேச்சுவார்த்தைகளைச் சீர்கு லைப்பதோடு, நாட்டின் பிராந்தியத் தனிமைப் படுத்தலையும் ஆழப்படுத்துகிறது.

அக்டோபர் 27 தேர்தல்களின் அதிகாரப்பூர்வ முடிவு கள், 120 இடங்களைக் கொண்ட நெசெட்டில் இஸ்ரே லிய அரபுக் கட்சிகளை முடிவெடுக்கும் சக்திகளாக ஆக்கியுள் ளன; போரை மீண்டும் தொடங்குவது இந்தக் கணக்கீட்டை நேரடியாகப் பாதிக்கிறது.

அதேசமயம் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடை யிலான பேச்சுக்களும் தோல்வியடைந்து வருகின்றது. அதனை ஈடுகட்ட அமெரிக்கா ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களை அவ்வப்போது நடத்தி வருகின்றது.

வெள்ளிக்கிழமை ஈரானின் தெற்கு ஹோர்மோஸ் கான் மாகாணத்தில் உள்ள சிரிக் என்ற இடத்தில் தொலைத்தொடர்பு கோபுரம் மீது அமெரிக்கா நடத்திய தாகக் கூறப்படும் வான்வழித் தாக்குதலுக்குப் பதிலடியாக பஹ்ரைனில் உள்ள அமெரிக்காவின் முன்கூட்டிய எச்சரிக்கை ரேடார் தளத்தை தாக்கியதாக ஈரானின் வேல்ஸில் இருந்து **அருள்**

இஸ்லாமிய புரட்சிகர காவலர் படை (IRGC) கூறியுள்ளது. அமெரிக்க இராணுவத்திடமிருந்தோ அல்லது பஹ்ரைனிட மிருந்தோ உடனடியாக எந்த உறுதிப்படுத்தலும் வரவில்லை.

வாஷிங்டனுக்கும் தெஹ்ரானுக்கும் இடையே தொடரும் பதட்டங்களுக்கு மத்தியில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. அமைதிப் பேச்சுவார்த்தைகள் முடங்கியுள்ள நிலையில், பெரிய அளவிலான அமெரிக்க இராணுவ நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப்படலாம் என்ற அச்சமும் நீடிக்கிறது.

ஈரானுக்கு எதிராக மேலும் இராணுவ நடவடிக்கை எடுப்பது அவசியமாகத் தெரியவில்லை என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் திங்களன்று கூறினார். அரபு நட்பு நாடுகள் நிதானத்தைக் கடைப்பிடிக்க அழைப்பு விடுத்துள்ள நிலையில், ஒரு இராஜதந்திர முன்னேற்றம் ஏற்படும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இருப்பினும், சூழ்நிலைகள் மாறினால் தாக்குதல்



களை மீண்டும் தொடங்க அமெரிக்கப் படைகள் “தயார் நிலையில்” தயாராக இருப்பதாக அவர் எச்சரித்தார்.

வியாழக்கிழமையன்று ட்ரூத் சோஷியல் பதிவில், ஈரான் நிதியையும் ஹோர்முஸ் ஜலசந்தியையும் வாஷிங் டன் கட்டுப்படுத்துவதாகக் கூறி, ஈரானுடன் இனி ஒரு அமைதி ஒப்பந்தம் தேவையில்லை என்று ட்ரம்ப் அறிவித்தார்.

நவம்பர் 2 மற்றும் 6 ஆகிய தேதிகளில் கெஷ்ம் தீவில் உள்ள ஈரானிய வான் பாதுகாப்பு நிலைகள் மீது அமெரிக்கா வரையறுக்கப்பட்ட வான்வழித் தாக்குதல்களை நடத்தியது. இந்த சமீபத்திய நடவடிக்கையை ட்ரம்ப் “சிறியது” என்று விவரித்தார்.

நவம்பர் 3 அமெரிக்க இடைக்காலத் தேர்தல்களைத் தொடர்ந்து, ஈரானுக்கு எதிராக ஒரு புதிய தாக்குதலைத் தொடங்குமாறு இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகு ட்ரம்பை வற்புறுத்தியதாகவும், ஆனால் அதிபர் மறுத்துவிட்டதாகவும் ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

வியாழக்கிழமையன்று பழமைவாத வானொலி தொகுப்பாளர் ஹக் ஹெவிட்டிடம் பேசிய ட்ரம்ப், ஒரு மூத்த அமெரிக்க அதிகாரியைக் கொன்றால் ஈரான் “நீண்ட

தொடர்ச்சி: பக்கம் 15

செம்மணி கூட்டுப் ... தொடர்ச்சி...

எனவே, செம்மணியில் மீட்கப்பட்ட சான்றுகள் இலங்கையின் உள்நாட்டு நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்ட பொருத்தப்பாட்டைக் கொண்டிருக்கலாம். சுயாதீனமாக சரி பார்க்கப்பட்ட சான்றுகள் சர்வதேச குற்றங்கள் இழைக்கப்பட்டதை நிலைநாட்டி, அதற்குப் பொறுப்பாக இருக்கக் கூடிய நபர்களை அடையாளம் காட்டினால், பிற அதிகார வரம்புகளில் உள்ள தகுதிவாய்ந்த அதிகாரிகள் சட்டப்படி வழக்குத் தொடர முடியுமா என்பதை மதிப்பிட முடியும்.

இந்தக் காரணத்திற்காக, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றுகளைப் பாதுகாக்கும் நடைமுறைகள் அவசியமானவை. மனித எச்சங்கள், தடயவியல் மாதிரிகள், புகைப்படங்கள், அகழ்வாராய்ச்சிப் பதிவுகள் மற்றும் சாட்சி வாக்குமூலங்கள் ஆகியவை, எதிர்கால நீதித்துறை நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கக்கூடிய, ஆவணப்படுத்தப்பட்ட சான்றுப் பாதுகாப்புச் சங்கிலி செயல்முறைகள் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும்.

சான்றுகளைப் போதுமான அளவு பாதுகாக்கத் தவறும் ஒரு விசாரணை, எதிர்காலப் பொறுப்புக்கூறலை நிரந்தரமாகப் பாதிக்கக்கூடும்.

ஐக்கிய நாடுகள் சபை வெறும் கண்காணிப்பைக் கடந்து செல்ல வேண்டும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, இலங்கையில் பொறுப்புக்கூறல் தோல்வி குறித்து மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. 2021-ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் 46/1, இலங்கையில் நிகழும் பெரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கடுமையான மீறல்கள் தொடர்பான சான்றுகளைச் சேகரித்தல், ஒருங்கிணைத்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கான மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகத்தின் திறனை வலுப்படுத்தியது. இந்த ஆணை பின்னர் வலுப்படுத்தப்பட்டு, அக்டோபர் 2025-இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் 60/1 உட்பட, நீட்டிக்கப்பட்டது.

குறிப்பிடத்தக்க வகையில், தீர்மானம் 60/1 இலங்கையில் பல கூட்டுப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டதை ஏற்றுக்கொண்டதுடன், சர்வதேசத் தரங்களுக்கு இணங்க நடத்தப்படும் உடல்களைத் தோண்டியெடுப்பதற்குப் போதுமான வளங்களையும் நிபுணத்துவத்தையும் உறுதிசெய்ய சர்வதேச ஆதரவைத் தேடுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியது. மேலும், இத் தீர்மானம், கூறப்படும் குற்றங்கள் குறித்து விரைவான, முழுமையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணைகளையும், தேவைப்படும் இடங்களில் வழக்குத் தொடரவும் அழைப்பு விடுத்தது. இந்த உறுதிமொழிகள் இப்போது செம்மணியில் அர்த்தமுள்ள நடவடிக்கைகளாக மாற்றப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சாசனத்தின் (OHCHR) இலங்கை பொறுப்புக்கூறல் திட்டம், சான்றுகளைப் பாதுகாப்பதற்கும் எதிர்கால பொறுப்புக்கூறல் செயல் முறைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் தற்போதுள்ள ஒரு வழிமுறையை வழங்குகிறது. இருப்பினும், அது ஒரு குற்றவியல் தீர்ப்பாயம் அல்ல; மேலும், அதன் தற்போதைய ஆணை, இலங்கைக்குள் வரம்பற்ற தடயவியல் விசாரணைகளை நடத்துவதற்கான அதிகாரத்தை தானாகவே வழங்குவதில்லை.

எனவே, செம்மணியில் ஒரு சுதந்திரமான சர்வதேச தடயவியல் விசாரணையை நிறுவுவதற்கு கூடுதல் ஏற்பாடுகளும் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

தமிழீழத் தேசத்தின்... தொடர்ச்சி...

இருந்தமைக்கு தமிழீழக் காவல்துறையின் பங்களிப்பும் முதன்மையானது.

மக்களின் காவல்துறை

அன்றைய தமிழீழக் காலத்தில் எந்தவொரு தமிழீழக் காவல்துறை உத்தியோகத்தரும் ஒளிந்திருந்து போக்கு வரத்து விதிகளை கட்டுப்படுத்துவதற்காக வேக அளப்பு எந்திரங்களைப் பிடித்துக்கொண்டு நிற்பதில்லை. அத்துடன் இலஞ்சம் வாங்காத ஒரு காவல்துறையாக மக்களுக்கு சேவை செய்த காவல்துறையாக, குற்றவாளிக ளைப் பாதுகாக்காத காவல்துறையாக, குற்றங்களைத் தடுத்து பொதுமக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்த காவல்துறையாக அவர்கள் பணி புரிந்தார்கள். உண்மையில் தமிழர் தேசத் திற்கு மாத்திரமின்றி, உலகத்தின் எந்தவொரு தேசமும் பாடம் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு காவல்துறையாக அவர்கள் அன்று இயங்கினார்கள் என்பது வரலாறு.

போரின் இறுதித் தருணம் வரையில் தமிழீழக் காவல்துறை தனது பணிகளை நிறைவேற்றியது. இன வழிப்புப் போரில் மக்களின் அவலங்களைத் துடைக்கவும் அவர்களுக்கான மனிதாபிமானப் பணிகளைச் செய்தும்கூட தமிழர் வரலாற்றில் தனது அடையாளத்தையும் பெயரையும் தமிழீழக் காவல்துறை பதிவாக்கியிருக்கிறது. அந்த வகையில் தமிழீழக் காவல்துறையின் வரலாறு என்பது, இலங்கைத் தீவில் விடுதலை வேண்டி தமது இறைமைக்காகப் போராடிய ஒரு இனம், போர்சூழ்ந்த ஒரு சமூகத்தில் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு, நிர்வாகம் ஆகியவற்றை உருவாக்க முயன்ற ஒரு அற்புதமான ஒரு விடுதலை இயக்கத்தின் இனத்தின் எழுச்சியின் அடையாளமும் வரலாறுமாகும்.

• • •

13-க்கு... இன்று 39 வயது!... தொடர்ச்சி...

ஈழத்தின் தலைநகர் எனக் கூறப்படும் திருகோணமலையில் இடம்பெற்றது.

மாகாண சபை ஒரு மாதம், மூன்று மாதங்கள் மட்டுமே இயங்கிய நிலையில், 1990, மார்ச் 01இல் திரு கோணமலையில் அவசர அவசரமாக இறுதி அமர்வு கூட்டப்பட்டு, முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தமிழீழப் பிரகடனத்தை நிறைவேற்றி, ஓட்டம் ஓட்டமாகத் திருகோண மலைத் துறைமுகத்தில் தயாராக இருந்த இந்தியக் கப்பலில் ஏறி, இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் தஞ்சமடைந்தார்.

ஜனாதிபதி மகிந்த அரசில் பங்காளியாக இருந்த மக்கள் விடுதலை முன்னணி, இணைந்த வடகிழக்கிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு 2006, அக்டோபர் 16 அன்று இலங்கை உயர் நீதிமன்றம், ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவினால் மேற்கொள்ளப்பட்ட வட கிழக்கு இணைப்பு செல்லுபடியாகாது எனத் தீர்ப்பளித்தது.

இத்தீர்ப்பைத் தொடர்ந்து, 2007, ஜனவரி 01 தொடக்கம் வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் என இரு தனித்தனி நிர்வாக அலகுகளாக அதிகாரபூர்வமாக வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டது.

அந்தப் பிரகடனம் அறிவித்த உடனே கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த மகிந்த ராஜபக்ஷ, தமிழ் ஆயுத ஒட்டுக்குழுவான கருணா, பிள்ளையானின் துணையுடன் கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அச்சுறுத்தல், கெடுபிடிகள் தலைவிரித்தாடின. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் விரட்டப்பட்டனர். எப்படியாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடாத சூழ்நிலையை உருவாக்குமாறு தமிழ் ஆயுத ஒட்டுக்குழுவை மகிந்த அரசு பணித்து, கொலை அச்சுறுத்தலைத் தொடரவிட்டது. அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை.

2008, மே 10இல் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றதும், முதலமைச்சராகப் பிள்ளையான் தெரி வானார்.

2012இல் இரண்டாவது கிழக்கு மாகாண சபைத் தேர்தலும், 2013இல் வடமாகாண சபையின் முதலாவது தேர்தலும் இடம்பெற்றது. மொத்தத்தில் 13ஆவது திருத்தச் சட்டம் மூலம் இணைந்த வடகிழக்கு தேர்தலில் ஆட்சி ஒரு வருடம் மூன்று மாதமும், கிழக்கு மாகாண சபைத் தேர்தல் ஆட்சி இரண்டு தடவையும், வடமாகாண சபைத் தேர்தல் ஆட்சி ஒரு தடவையும் மட்டுமே இடம்பெற்று, 39 ஆண்டுகள் கடந்து, வடகிழக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் 13ஆவது வாய்பாட்டை உச்சரித்து மாகாண சபைத் தேர்தலுக்காக இலவு காத்த கிளிகளாக (எதிர்பார்த்துக் காலத் தைக் கடத்துகின்றனர்.

• • •

செம்மணி மனிதப்... தொடர்ச்சி...

தாக்கி உடல் பாகங்கள் உடைக்கப்பட்டும், தலையில் காயங்களுடனும், குழந்தைகள் உட்பட அனைவரையும் குறித்த இடத்தில் புதைத்திருக்க முடியும்?

இவ்வாறு நோயால் இறந்தவர்களைப் புதைத் திருந்தால், வைத்தியசாலையினால் அவர்களின் மரணத் திற்கான காரணம் என்ன என்பதற்கான அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறான எந்த அறிக்கைகளும் கொடுக்கப்பட வில்லை. மன்னாரில் உள்ள மனிதப் புதைகுழிகளை எடுத்துக்கொண்டாலும், அவர் மாறுபட்ட கருத்துக்களைக் கூறியுள்ளார். குறிப்பாக, ஒல்லாந்தர் காலத்து எலும்புக் கூடுகள் என்றும் அவர் கூறியுள்ளார். பேராசிரியர் ஒவ் வொரு இடங்களிலும் மாறுபட்ட கருத்துக்களைக் கூறி வருகிறார்.

அதே மாதிரிதான் தற்போது செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பாகவும் அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார். ஆனால், ஒரு இராணுவ வீரர், 1990ஆம் ஆண்டு முதல் 1995ஆம் ஆண்டு வரையான யுத்த காலப்பகுதியில் சுமார் 600 பேரைக் கொன்று அந்தச் செம்மணிப் புதை குழியில் புதைத்துள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

அவ்வாறு கூறப்பட்ட இடத்தில் இன்றைக்கு 583 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அப்படியா னால், இன்னும் எத்தனை மனித எலும்புக்கூடுகள் குறித்த புதைகுழிப் பகுதியில் இருக்க வேண்டும்? அரசாங்கத் தைக் காப்பாற்றும் வகையில் அவர் இவ்வாறான கருத்துக் களைக் கூறி வருகிறார்.

அரசாங்கங்கள் மாறி மாறி வந்தாலும், அந்த அரசைக் காப்பாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வரு கின்றனர். அரசையும் இராணுவத்தையும் காப்பாற்றும் நோக்கில் இந்த அறிக்கைகள் வெளியிடப்பட்டு வருகின் றன. இதனை நாங்கள் ஏற்கவும் நம்பவும் முடியாது.

காணாமல் ஆக்கப்பட்ட சுமார் 17 ஆயிரம் உறவுகளை எங்களிடம் ஒப்படைத்தனர். மேலும், வீடுகளிலும் வீதிகளி லும் வைத்து அவர்களைப் பிடித்துச் சென்றுள்ள னர். அகதி முகாம்களில் இருந்த ஆண்களையெல்லாம் அவர்கள் கொண்டுசென்றனர். அந்த 17 ஆயிரம் உறவுகளுக்கும் இதுவரையிலும் என்ன நடந்தது என்று எங்களுக்குத் தெரியாது.

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்காக ஒவ்வொரு வருடமும் வீதியில் நின்று நாங்கள் போராடி வருகிறோம். எங்களுடைய பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? எங்களுடைய பிள்ளைகள் உயிரோடு இருக் கிறார்களா, இல்லையா? என்று சொல்லி நாங்கள் கேட்டுக் கொண்டே இருக்கிறோம்.

இதுவரை எங்களுக்கு ஒரு பதிலும் தராமல், இன்றைக்கு அவர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்; அவர்கள் நோயால் இறந்தார்கள் என்று.

ஜனாதிபதியின் வரவு ... தொடர்ச்சி...

என்றும் அவர் வலியுறுத்தினார்.

“எமது மக்களின் அரசியல் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. கடந்த கால அரசாங்கங்கள் எவ்வாறு செயற்பட்ட னவோ, அதேபோன்றே தற்போதைய அரசாங்கமும் செயற்படுகிறது.

மயிலத்தமடு – மாதவனை பகுதியில் ஏனைய இனத்தவர்கள் திட்டமிட்ட வகையில் குடியமர்த்தப்படுகின்ற னர். மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் கீழுள்ள காணிகள் தமிழ் மக்களுக்குக் கிடைப்பதில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில அபிவிருத்தித் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கியுள்ளதற்காக ஜனாதிபதிக்கு நன்றியுணர்வுடன் இருக்க வேண்டும் என்ற காரணத்துக்காகத் தமிழ் அரசியல்வாதிகள் கார்த்திகை மாதத்தைப் புறக்கணிக்கக் கூடாது. தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்கக் கூடாது” என்றும் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் வலியுறுத்தினார்.

2027ஆம் ஆண்டிற்கான ... தொடர்ச்சி...

பொருளாதாரச் செழிப்புக்கு இட்டுச் செல்லும் ‘வளர்ச்சி வழிபட ஆவணமாக’ முழுமையாக உருவெடுக்கத் தவறியுள் ளது என்றே கூற வேண்டும்.

கடுமையான நிதி ஒழுக்கம் மற்றும் வரி முகாமை அவசியம்தான் என்றாலும், பொதுமக்களின் வாங்கும் சக்தியை உயர்த்தாத எந்தவொரு திட்டமும் நீடித்த பலனைத் தராது.

எதிர்காலத்தில் அரசாங்கம் தனது வருமானத்தை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், ஊழலை ஒழித்தல், அரச நிறுவனங்களின் செயற்றிறனை மேம்படுத்துதல் மற்றும் வெளிப்படைத்தன்மையைக் கடைப்பிடித்தல் மூலமாக மட்டுமே இத்தகைய வரவு-செலவுத் திட்டங்களின் உண்மையான பலன்களை மக்களிடம் சேர்க்க முடியும்.

அதுவரையில் இந்த வரவு-செலவுத் திட்டம் என்பது வெறுமனே இலக்கங்களும், தரவுகளும், யோசனைகளும் நிறைந்த ஆவணமாகவே இருக்குமே தவிரவும் நாட்டின் பொருளாதாரத்தை முன் னோக்கி கொண்டு செல்வதற்கான பங்களிப்பை ஒரு போதும் வழங்கப்போவதில்லை.

காத்திருப்புக்கள் முடிந்தது ... தொடர்ச்சி...

காலம் நிலைத்திருக்காது” என்று எச்சரித் தார். ஈரானிய அச்சுறுத்தல்கள் காரணமாக கருவூலச் செய லாளர் ஸ்காட் பெசென்ட் ஒரு இராணுவத் தளத்திற்கு மாற்றப்பட்டதாக வந்த செய்திகளைத் தொடர்ந்து இந்தக் கருத்துக்கள் வெளியாகின; இதை தெஹ்ரான் மறுத்தது.

ஈரானின் உச்ச தேசியப் பாதுகாப்புக் குழுவின் செயலாளர் மொஹ்சென் ரெசாய், வியாழக்கிழமையன்று, ஐரோப்பாவில் உள்ளவை உட்பட, ஈரான் மீதான ஒரு புதுப்பிக்கப்பட்ட தாக்குதலில் ஈடுபடும் அமெரிக்க இராணு வத் தளங்கள் சட்டபூர்வமான இலக்குகளாகக் கருதப்படும் என்று எச்சரித்தார்.

இந்த நிலையில் ஒரு அமெரிக்கப் போர்க்கப்பலை ஈரானுக்கு அருகில் நகர்த்தியது, ஒரு முழுமையான இடைமறிப்பிற்கும் ஒரு பேரழிவிற்கும் இடையிலான இடைவெளியைச் சுருக்கிவிட்டது. “ராஜதந்திர ரீதியாக வெளியேறும் வழி அகற்றப்பட்டுள்ளது.

பேச்சுக்கள், படை நகர்வுகள் மற்றும் மூடப்பட்ட நீர்வழிப்பாதைகள் ஆகிய அனைத்தும் ஒன்றிணையும் போது, ஈரானும் காத்திருப்பதை நிறுத்திவிட்டு, தாக்குதலுக் குத் தயாராகின்றது

• • •

வலி. வடக்கு மக்களின்... தொடர்ச்சி...

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாகக் காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்தனர்.

அதன்படி, இன்றைய தினம் 30ஆவது வெள்ளிக் கிழமையாகக் காணி உரிமையாளர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

செம்மணி: இனப்படுகொலை... தொடர்ச்சி...

எச்சங்களைப் பட்டியலிடுவதன் மூலம் மட்டும் இந்தக் கடமைகளை நிறைவேற்ற முடியாது.

சர்வதேச விசாரணையின் அவசியம்

இலங்கை அரச நிறுவனங்களுக்கு எதிரான நீண்டகாலக் குற்றச்சாட்டுகள், முற்றிலும் உள்நாட்டு விசாரணையின் சுதந்திரம் மற்றும் நம்பகத்தன்மை குறித்து கணிசமான கவலைகளை உருவாக்குகின்றன. செம்மணியை ஒரு தொல்பொருள் தளமாக மட்டும் கருதாமல், ஒரு சாத்தியமான குற்ற நிகழ்விடமாக விசாரிக்கப்படுவதை உறுதிசெய்ய, சர்வதேச தடயவியல் பங்கேற்பு, சுதந்திரமான மேற்பார்வை, சாட்சிப் பாதுகாப்பு மற்றும் வெளிப்படையான சான்றுப் பாதுகாப்பு ஆகியவை அவசியமானவை.

இலங்கை ரோம் சட்டத்தில் ஓர் உறுப்பினராக இல்லாவிட்டாலும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குத் தானாகவே அதிகார வரம்பு இல்லை என்றாலும், தகுந்த அதிகார வரம்பைக் கொண்ட தேசிய நீதிமன்றங்களின் முன்பான நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச சான்றுகளைப் பாதுகாக்கும் வழிமுறைகள் உட்பட, பிற பொறுப்புக்கூறல் வழிகள் சாத்தியமாகவே உள்ளன.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைத் தீர்மானம் 60/147-இல் பிரதிபலிப்பது போல, வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு, உடல்களை அடையாளம் காண்பது என்பது உண்மை, நீதி மற்றும் பயனுள்ள நிவாரணங்களுக்கான அவர்களின் உரிமை களிலிருந்து பிரிக்க முடியாத ஒன்றாகும்.

முடிவுரை

தொற்றுநோய்கள் அல்லது இயற்கை பேரழிவுகள் தொடர் பான ஆதாரமற்ற விளக்கங்கள், இனப்படுகொலை மற்றும் அரசின் பொறுப்பு குறித்த நம்பகமான குற்றச்சாட்டு களை மறைத்து, நிச்சயமின்மையை குற்றமற்றவர் எனக் காட்டும் மற்றொரு உதாரணமாக செம்மணி ஆகிவிடக் கூடாது.

முக்கியமான கேள்விகளுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை: செம்மணியில் அடக்கம் செய்யப்பட்ட நபர்கள் யார், அவர்கள் எப்படி இறந்தார்கள், அவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்களா அல்லது வலுக் கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டார்களா, மேலும் அவர்களின் மரணம் அல்லது அடக்கத்தில் இலங்கை அரச அதிகாரிகளுக்கு என்ன தொடர்பு இருந்தது?

இந்தக் கேள்விகள் சுயாதீனமாக விசாரிக்கப்படும் வரை, எந்தவொரு ஊக விளக்கமும் குற்றச்சாட்டுகளின் தீவிரத்தைக் குறைக்க அனுமதிக்கப்படக்கூடாது.

ஈழத் தமிழர்களுக்கு, செம்மணி என்பது இறந்தவர் களைக் கண்டறிவது மட்டுமல்ல; மாறாக, இலங்கை அரசால் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் இனப்படுகொலைச் செயல்களைச் சுற்றியுள்ள உண்மை மற்றும் பொறுப்புக் கூறல் மறுக்கப்படுவதை எதிர்கொள்வதாகும். இந்த எச்சங்கள் அடையாளம் காணப்பட வேண்டும், சான்றுகள் பாதுகாக்கப்பட வேண்டும், மேலும் குற்றவியல் பொறுப் பைச் சான்றுகள் நிலைநாட்டும் இடங்களில் எல்லாம் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என சர்வதேச நீதி வலியுறுத்துகிறது.

அமெரிக்க இடைக்காலத் ... தொடர்ச்சி...

குடியேற்றக் கொள்கைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இது H-1B விசா திட்டம் தொடர்பான எதிர்காலச் சட்டங்களில் தாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்புள் ளது, இருப்பினும் விசா விதிகளில் உடனடி மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைவு.

ஜனநாயகக் கட்சியினர் வேலைவாய்ப்பு மற்றும் குடும்பம் சார்ந்த குடியேற்றத்தை விரிவுபடுத்துவதை ஆதரிக்கின்றனர்; அதே சமயம், அமெரிக்க நிறுவனங்கள் மேற்கொள்ளும் 'அவுட்சோர்சிங்' (வெளிநாடுகளுக்குப் பணிகளை வழங்கும்) நடைமுறைகளை அவர்கள் ஆதரிக்கவில்லை.

ட்ரம்ப் முன்னெடுத்த கடுமையான குடியேற்ற விதிகள் குறித்து நாடாளுமன்றத்தில் கண் காணிப்பு அதிகரிக்கக்கூடும்; ஆனால், புதிய H-1B விசா விண்ணப் பங்களுக்கான 100,000 டாலர் கட்டணம் உட்பட, இந்தியா வைப் பாதிக்கும் அதிபரின் அறிவிப்புகள் ரத்து செய்யப் படுவதற்கான வாய்ப்பு குறைவு.

இந்தக் கட்டண முறையை கீழ் நீதிமன்றங்கள் ரத்து செய்துள்ளன, இருப்பினும் தற்போதைய நிர்வாகம் இதை உச்ச நீதிமன்றம் வரை கொண்டு செல்லவே அதிக வாய்ப்புள்ளது.

வாஷிங்டனில் மாறிவரும் அதிகாரச் சமன்பாடு களால், இந்தியா-அமெரிக்க பாதுகாப்பு உறவுகளில் பெரிய பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை. கடந்த ஆண்டு இரு நாடுகளும் 10 ஆண்டுகால பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன; அது தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

சீனா குறித்து இந்தியாவும் அமெரிக்காவும் ஒரே மாதிரியான கவலைகளைக் கொண்டுள்ளன. "இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கான அமெரிக்காவின் வியூகத்திற்கும், சீனாவைக் கட்டுப்படுத்துவதற்கும் இந்தியாவுடனான வலுவான பாதுகாப்பு கூட்டாண்மை மிக முக்கியமானது என்பதில் அமெரிக்காவின் இரு கட்சிகளுக்கும் (ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சிகள்) உடன்பாடு உள்ளது" என்று அமெரிக்காவைச் சேர்ந்த 'கவுன்சில் ஆன் ஃபாரின் ரிலேஷன்ஸ்' (Council on Foreign Relations) அமைப்பின் மூத்த ஆய்வாளர் மஞ்சரி சாட்டர்ஜி மில்லர் கடந்த ஆண்டு குறிப்பிட்டிருந்தார்.

மேலும், 'குவாட்' (QUAD) கூட்டமைப்பில் இந்தியா ஒரு பங்காளராக இருக்க வேண்டும் என்று வாஷிங்டன் விரும்புகிறது. எனவே, இரு நாடுகளுக்கும் இடையே வியூக ரீதியான ஒருங்கிணைப்பு, முக்கியமான தொழில்நுட்பங்கள், தகவல் பரிமாற்றம் மற்றும் ராணுவ உபகரணங்களை இணைந்து தயாரித்தல் போன்ற செயல்பாடுகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும்.

மத்திய கிழக்கு பிராந்தியம் தொடர்பாக ட்ரம்ப் நிர்வாகத்தின் திட்டங்கள் குறித்து நிச்சயமற்ற சூழல் நிலவுகிறது. ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள நாடாளுமன்றம், ட்ரம்பின் மத்திய கிழக்குக் கொள்கைக ளுக்கு ஒரு தடையாக இருக்குமா என்பது சந்தேகமே; ஏனெனில், அவரது கொள்கைகளால் ஏற்கனவே கச்சா எண்ணெய் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

இருப்பினும், தேர்தல் நாளன்று அறிவிக்கப்பட்ட, இஸ்ரேலுக்கான ஆண்டு உதவியில் 4 பில்லியன் டாலரைக் குறைக்கும் முடிவு, அந்தப் பிராந்தியத்தில் ஏற்படும் மோதல்களில் அமெரிக்காவை இழுத்துவிடும் இஸ்ரேலின் போக்கைக் கட்டுப்படுத்த உதவக்கூடும்.

மத்திய கிழக்கு நெருக்கடி தணிந்தால், இந்தியா பெரும் பயனடையும்; ஏனெனில், இந்தியா தனது எரிசக்தி தேவைகளுக்கு அந்தப் பிராந்தியத்தையே பெரிதும் நம்பியுள்ளது. கச்சா எண்ணெய் விலை குறைந்தால், இந்தியாவுக்குத் தேவைப்படும் டாலர்களின் அளவு குறையும், இந்திய ரூபாயின் மதிப்பு வலுப்பெறும், மேலும் தெற்காசிய நாடான இந்தியாவில் பணவீக்க அழுத்தமும் குறையும்.

ட்ரம்ப் மீண்டும் போட்டியிட முடியாத சூழலில் இருப்பதாலும், நாடாளுமன்றத்தில் தனது கட்சியின் கட்டுப்பாட்டை இழந்திருப்பதாலும், அவர் அமெரிக்க வாக்காளர்களைத் திருப்திப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இல்லை. அதே சமயம், அவர் இன்னும் பரந்த அளவிலான அதிபர் அதிகாரங்களைக் கொண்டுள்ளார். இந்த அதிகாரங் களை அவர் எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பது, உல கெங்கிலும் உள்ள பல நாடுகளின் தூதரக, பொருளாதார மற்றும் ராணுவ விவகாரங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

அதிபர் பயன்படுத்தும் 'வீட்டோ' (மறுப்பு) அதிகாரத்தை - அடிக்கடி இதைப் பயன்படுத்துவதாகக் குறிப் பிட்டுள்ளார் - நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் அதற்கு எதிராக வாக்களித்தால் மட்டுமே முறியடிக்க முடியும். மீதமுள்ள குடியரசுக் கட்சிச் சட்டமியற்றுபவர்களிடையே ட்ரம்ப் கொண்டுள்ள வலுவான ஆதரவைக் கருத்தில் கொண்டால், இது கடினமான ஒரு கோரிக்கையாகும்.

இந்தக் கட்டத்தில், இந்தியா நீண்டகால அணுகுமு றையையே கடைப்பிடிக்கக்கூடும் என்று தோன்றுகிறது.

நன்றி: ரஸ்யா ரூடே

ஈரான் மீதான ... தொடர்ச்சி...

ஆதரிப்பதாக ராய்ட்டர்ஸ்/இப்சோஸ் (Reuters/Ip-sos) கருத்துக் கணிப்பு கண்டறிந்துள்ளது. கத்தாரின் தொடர்ச்சியான மத்தியஸ்த முயற்சிகள் இருந்தபோதிலும், ஈரான் தனது செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை வெளிநாடுகளுக்கு மாற்றுவதை நிராகரித்துள்ளதுடன், பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்குவதற்கு முன்பு வாஷிங்டன் தெஹ்ரானின் கோரிக்கைகளை ஏற்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

சிவாஜிலிங்கத்தின்... தொடர்ச்சி...

குறித்த விடயம் தொடர்பில், சட்டத்தரணி எனும் ரீதியில் குடும்பத்தினரால் தனக்குத் தெரியப்படுத்தப்பட்டுள் ளதாகத் தெரிவித்த நல்லதம்பி சிறிகாந்தா, மரணப் படுக்கையில் சிவாஜிலிங்கம் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் போது, அவரது குடும்பத்தினரை மேலும் துன்பத்திற்கு உள்ளாக்கும் வகையிலும், அவர்களுக்கு நெருக்கடிகளையும் அச்சுறுத்தல்களையும் விடுக்கும் முகமாகவும் இந்தச் செயற்பாடு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

சிவாஜிலிங்கத்தின் வீட்டிற்குச் சென்ற பயங் கரவாதத் தடுப்புப் பிரிவினர் அவரது மனைவியிடம் நீண்ட நேரம் விசாரணைகளை முன்னெடுத்தமையை வன்மையாகக் கண்டிப்பதாகவும் சட்டத்தரணி சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தியில்... தொடர்ச்சி...

திருகோணமலை ஆகிய இயற்கை துறைமுகங்கள் அமைந் திருந்தும், அவற்றை மையப்படுத்திய நவீன பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்துக் கட்டமைப்புகள் முழுமை யாகச் செயற்படுத்தப்படவில்லை.

ஒருநாட்டின்சமச்சீரானஅபிவிருத்திக்குஅனைத்து மாகாணங்களுக்கும் சமமான வளப் பகிர்வு அவசியமாகும். வடகிழக்கு மக்களும் இந்நாட்டின் சமவுரிமை கொண்ட பிரஜைகள் என்ற வகையில், அவர்களுக்கும் பாதுகாப்பான, விரைவான மற்றும் நவீன போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான முழு உரிமை உண்டு. எனவே, அரசாங்கமும் போக்குவரத்து அதிகாரிகளும் பிராந்திய ரீதியான பாரபட்சங்களைக் களைந்து, வடகிழக்கின் வீதி, ரயில், கடல் மற்றும் வான்வழிப் போக்குவரத்துக் கட்டமைப்பு களை நவீனமயப்படுத்தத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவே அப்பிராந்திய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும், தேசிய நல்லிணக்கத்திற்கும் வழிவகுக்கும்.

200 பேரின் மரணத்தைத்... தொடர்ச்சி...

சிதைத்துவிடும் என்று பலர் அஞ்சும் நிலையில், தெற்கு சூடான் தேர்தல்களை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் வேளையில் இந்தக் கண்டுபிடிப்புகள் வெளியாகியுள்ளன. "மேலும் திறம்பட்ட தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கத்திற்கும் UNMISS-க்கும் போதுமான தகவல்க ளும் நேரமும் இருந்தன. வலுவான நடவடிக்கை எடுக்கத் தவறியதால் உயிர்கள் பலியாகின," என்று அம்னெஸ்டியின் கிழக்கு மற்றும் தெற்கு ஆப்பிரிக்காவுக்கான இயக்குநர் டைகர் சகுடா கூறினார்.

அண்டை மாவட்டமான மயோமில் இருந்து 1,000 முதல் 1,500 வரையிலான ஆயுதமேந்திய நபர்கள், குடியிருப்பாளர்களைச் சுட்டதாகவும், வீடுகளை எரித் ததாகவும், மருத்துவமனையின் ஒரு பகுதியைக் கொள் ளையடித்ததாகவும் அம்னெஸ்டி தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 200-க்கும் மேல் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதில் 130 நகரவாசிகள், 76 பாதுகாப்புப் படையினர் மற்றும் ஏழு வெளிநாட்டினர் அடங்குவர்.

230-க்கும் மேற்பட்ட கட்டடங்கள் எரிந்து சாம்பலா னதையும், பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் இரண்டு பொதுப் புதைகுழிகளில் புதைக்கப்பட்டதையும் செயற்கைக்கோள் படங்கள் காட்டியதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது. மாயோம் மாவட்டத்தைச் சேர்ந்த பல இளைஞர்கள் முன்னதாகக் கொல்லப்பட்டதால் ஏற்பட்ட பதற்றங்களே இந்தத் தாக்குதலுக்குக் காரணமாக இருந்திருக்கலாம் என்று அம்னெஸ்டி கூறியுள்ளது.

ரஸ்யாவின் 'நிழல் கப்பற்படை'... தொடர்ச்சி...

தடைகளை மீறி, அந்நாடுகளிலிருந்து கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்களைக் கொண்டு சென்றதால், ஸ்மிர்டோஸ் கப்பல் 'நிழல் கப்பற்படை' கப்பல் என்று முத்திரை குத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையால் இந்தத் தடைகள் அங்கீகரிக்கப்படாததால், அவை சட்டவிரோதமானவை என்று சீனா, இந்தியா, மற்றும் பிற தெற்கு உலக நாடுகள், அத்துடன் ரஸ்யாவும் வாதிட்டுள்ளன.

பந்தின் மேல்முறையீடு வியாழக்கிழமை விசாரிக்கப்படும். அவர் தப்பியோட அல்லது தப்பிச் செல்ல ரஸ்யாவின் உதவியைப் பெறக்கூடும் என்று இங்கிலாந்து நீதிமன்றம் கூறியதால், அவரது முந்தைய ஜாமீன் மனு நிராகரிக்கப்பட்டது.

38 வயதான, இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், வட இந்திய மாநிலமான உத்தரகாண்டைச் சேர்ந்தவர். மேலும், இவர் தனது வயதான பெற்றோருக்கு முதன்மைப் பராமரிப்பாளராகவும் உள்ளார். அவரது மனைவி ரிது, அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று பகிரங்கமாகப் பரிந்துரைத்ததோடு, அவரை ஒரு "பலியாடாக்கி" விட்டதாகவும் கூறியுள்ளார்.

கப்பலின் உரிமையாளர் ஹாங்காங்கைச் சேர்ந்த ஜாவோ யாவோ ஷிப்பிங் என்று சீட்ரேட் மாரிடைம் நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது. சென்னையைச் சேர்ந்த விகா லைன் மரைன் சர்வீசஸ் அதன் சர்வதேசப் பாதுகாப்பு மேலாளராக உள்ளது.

கப்பலின் 24 பேர் கொண்ட குழுவில் பெரும்பாலானோர் ஆகஸ்ட் மாதத்திற்குள் தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்பிவிட்டனர் என்றும், சிலர் இங்கிலாந்தின் டோர்செட்டில் உள்ள வெய்மவுத் மற்றும் போர்ட்லேண்ட் கடற்கரைக்கு அப்பால் நங்கூரமிடப்பட்டுள்ள ஸ்மிர்டோஸ் கப்பலில் இன்னும் உள்ளனர் என்றும் செய்தி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .

சிறுவர் ஆக்கம்

வானம்

எத்தனை முறை பார்த்தாலும்
சலிக்காத ஒரே அழகு நீ தான்,
காலையில் சிரிக்கும் சூரியனும்
மாலையில் மயங்கும் நிலவும்
உன் மடியில் தான் உறங்குகின்றன!

மேகங்கள் உன் கவிதைகள்,
மழைத்துளிகள் உன் கண்ணீர்கள்,
இடி முழக்கம் உன் கோபம் என்றாலும்
வானவில் தான் உன் சிரிப்பு!

பறவைகளுக்கு நீ தான் வீடு,
கனவுகளுக்கு நீ தான் எல்லை,
உன்னைப் பார்க்கும் போதெல்லாம்
என் மனமும் பறக்கத் தோன்றுகிறது!

வானமே... நீ
எட்டாத தூரத்தில் இருந்தாலும்,
என் கண்களுக்கு மிக அருகில் இருக்கிறாய்!

சு.திகழினி
கன்னியா

சிற்பி

கல்லுக்குள் உறங்கும் கடவுளை எழுப்புபவன் நீ,
சொல்லாத கல்லுக்கும் உயிர் கொடுப்பவன் நீ!

உளியின் ஒவ்வொரு அடியிலும்
உன் கனவுகள் சிதறாமல் சிலையாகும்,
வியர்வைத் துளிகள் விழுந்த இடமெல்லாம்
விண்ணவர் வந்து வாழும் கோவிலாகும்!

நீ செதுக்கிய சிலையில் தான்
நாங்கள் கடவுளைக் காண்கிறோம்,
நீ தொடாத கல் இன்னும்
வெறும் கல்லாகவே கிடக்கிறது!

சிற்பியே... நீ
கல்லை வணங்குபவன் அல்ல,
கல்லுக்குள் கடவுளை வைப்பவன்!!

ம.துலக்சனா
விளாங்குளம்

மக்களின் கொண்டாட்டம், விலங்குகளின் திண்டாட்டம்

மனிதர்களாகிய நாம் பண்டிகை என்றாலே மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கிறோம். தீபாவளி, புத்தாண்டு, திருமணம் என்று எந்தக் கொண்டாட்டமாக இருந்தாலும் வாணவேடிக்கை, பட்டாசு, பெரும் சத்தம் இல்லாமல் நமக்கு கொண்டாட்டம் முழுமை அடைவதில்லை. ஆனால் நம்முடைய இந்த மகிழ்ச்சிக்குப் பின்னால், வாய் பேச முடியாத விலங்குகள் படும் வேதனையை நாம் எப்போதாவது யோசித்துப் பார்த்திருக்கிறோமா?

நாம் ஒரு பட்டாசை வெடிக்கும் போது, அதன் சத்தம் நமக்கு சந்தோஷமாக இருக்கிறது. ஆனால் அதே சத்தம் ஒரு நாய்க்கு, பூனைக்கு, பறவைக்கு பேரிடியாகக் கேட்கிறது. மனிதர்களை விட பல மடங்கு கூர்மையான கேட்கும் திறன் கொண்டவை விலங்குகள். அதனால் சிறிய வெடிச்சத்தம் கூட அவைகளுக்கு பெரும் பயத்தையும், நெஞ்சு படபடப்பையும் ஏற்படுத்துகிறது. பயத்தில் தெரு நாய்கள் எங்கெங்கோ ஓடி, வாகனங்களில் அடிபட்டு இறக்கின்றன. பறவைகள் கூடுகளை விட்டுப் பறந்து, குஞ்சுகளைப் பிரிந்து தவிக்கின்றன.

பட்டாசுப் புகையால் காற்று மாசடைகிறது. இது மனிதர்களுக்கு மட்டுமல்ல, விலங்குகளுக்கும் மூச்சுத் திணறலை ஏற்படுத்துகிறது. அது மட்டுமல்ல, கொண்டாட்டம் முடிந்த பின் நாம் வீசிச் செல்லும் பிளாஸ்டிக் குப்பைகள், உணவுக் கழிவுகள் ஆகியவை விலங்குகளின் உயிருக்கே ஆபத்தாக முடிகிறது.

கொண்டாட்டம் என்பது மற்ற உயிர்களைத் துன்புறுத்தி வருவது அல்ல. நம்மைப் போலவே விலங்குகளுக்கும் இந்த பூமியில் வாழ உரிமை உண்டு. எனவே, இனி வரும் பண்டிகைகளில் சத்தம் கூடிய பட்டாசுகளைத் தவிர்ப்போம், விலங்குகளுக்கு பாதுகாப்பான இடம் கொடுப்போம், அவைகளுக்கு தண்ணீர் வைப்போம்.

மக்களின் கொண்டாட்டம், விலங்குகளின் கொண்டாட்டமாகவும் மாறும் போது தான், அந்தக் கொண்டாட்டம் உண்மையான மகிழ்ச்சியைத் தரும்.

சி.கிருத்திகா
அன்புவழிபுரம்





தாயகமும் வாழ்வும்

